Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 08 விலை ரூபா: 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 21 (05 07 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 137

## பரீட்சை செய்முறைகள் யாழ். மாவட்டத்தில்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் கடந்த மேமாதம் நடைபெற்ற க. பொ. த உயர்தர விசேடபரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைகின்றன.

இப் பரீட்சைக்குத் தோற்றிய வடபகுதி மாணவர்களுக்கான மனைப்பொருளியல் பாடத்திற்கான செய்முறைப் பயிற்சிப் பரீட்சை இம்முறை யாழ். மாவட்டத்தில் நடாத்தப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாணத்தில் வாழும் தமிழர்களை

# 14 நாட்களுக்குள் பொலிஸில் பதிவு செய்ய உத்தரவு

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் அகதி முகாம்களுக்கு வெளியே தற்காலிகமாக வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் பதினான்கு நாட்களுக்குள் தமது அடையாளங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறு பதிவு செய்யாதோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இருவாரங்களுக்கு முன்னர் கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பைத் தொடர்ந்தும் இன்னும் கொழும்பில் குண்டுகள் வெடிக்கலாம் என சிறிலங்கா புலனாய்வுத்துறைக்குக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்துமே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் இவ் அறிவித்தலில் மேலும் தனியார் பயன்படுத்துவதற்கு வீடுகளை அல்லது கட்டடங்களை வாடகைக்குக் கொடுத்திருப்போர் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்யத் தவறுவோர் அல்லது பொய்யான தகவல்களை வழங்குவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்.

அவசர காலச் சட்டத்தின் கீழான குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டால் அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடுவர்களுக்கு பாதுகாப்பளித்தாக வீட்டுச் சொந்தக்காரர்களும் குற்றச் செயல்களுக்கு உடந்தையாக இருந்தார் எனக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

## வீரவணக்கம்

### பிரசாத்

(நமது நிருபர்)

ஆனையிறவு முகாமிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த திங்களன்று (01-07-91) இடம்பெற்ற மோதலில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வீரவேங்கை பிரசாத் நேற்று வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டிப்பகுதியைச் சேர்ந்த பாலிப்போடி மகேந்திரன் என்னும்வீரவேங்கை பிரசாத்திற்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இலங்கையில் 32 எயிட்ஸ் நோயாளர்

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோயினால் இதுவரை 32பேர் பாதிப்புற்றுள்ளனர் என்றும் 9 பேர் வரை மரணமாகியுள்ளனர் என்றும் 600 பேர்வரை பாதிக்கப்படவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அழுகிய நிலையில் இரு சடலங்கள்

(வவுனியா)

வவுனியா கந்தபுரம் என்னும் பகுதியில் அழுகிய நிலையில் இரு சடலங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

சிறிலங்கா இராணுவத்தின் கண்காணிப்பிலுள்ள இப்பகுதியில் சில தினங்களுக்கு முன்பிருந்து இச் சடலங்கள் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

இப்பகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமக்களின் இரு (8 ஆம் பக்கம் பார்க்க)

## பதிவு செய்யும் காலக்கெடு தமிழகத்தில் நீடிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கள் பெயர் விபரங்களைப் பதியும் காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அகதிமுகாம்களுக்கு வெளியில் வதியும் இலங்கைத் தமிழர் தமது விபரங்களை அண்மையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தரப் புகலிடம் தமிழகத்தில் தரமுடியாது

### - வாழப்பாடி

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு, தமிழகத்தில் நிரந்தர புகலிடம் தரமுடியாது என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

விரைவில் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டால் தமிழக அரசுக்கும் நல்லது. அதுபோல் தமிழ் அகதிகளுக்கும் நல்லது என்று வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

## பழுகாமத்தில் பலர் கைது; மூன்றுமாணவர்சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் உள்ள திருப்பழுகாமம் என்ற பகுதியை சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து சுற்றிவளைத்து தேடுதல் நடாத்திப் பல பொதுமக்களைக் கைது செய்ததுடன் மூன்று உயர்வகுப்பு தமிழ் மாணவர்களையும் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் பெரிய போரதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் மேற்படி பகுதியைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். பின்னர் அப்பகுதி முழுவதும் தேடுதல் நடாத்தி சுமார் 200 அப்பாவித் தமிழர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களை விசாரணைசெய் தஐந்துபேரை தமது முகாமிற்கு அழைத்துச் சென்றனர். ஏனையோரை விடுதலை செய்தனர். முகாமிற்கு அழைத்துச் செல்லப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கிலிருந்து விடுவிக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம வடக்கு பகுதியில் இராணுவத்திடம் அகப்பட்டிருந்த இருபத்தியிரண்டுபேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நல்லூர் வீதி அலுவலகத்தில் வைத்து உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கதிரமலை கதிரவேல் (வயது 18, மாவிட்டபுரம்). வேலாயுதம்பராசக்தி (வயது 43, தையிட்டி), வேலாயுதம் நரேந் (8 ஆம் பக்கம் பார்க்க)

## கரையோரம் பாதுகாப்பு சரத்பவார் - பீஷ்மர் பேச்சு

(சென்னை)

இலங்கைத்தமிழ்ப்போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தமிழக கட்லோரப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது தொடர்பாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயணசிங்குடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

நேற்று சென்னையில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின் போது தமிழகத்திற்குள் (8 ஆம் பக்கம் பார்க்க)

## தபால்களைச் சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்து திங்கள் கொழும்பு செல்லும் கப்பலில் வடபகுதி தபால்கள் கொண்டுசெல்லப்படவுள்ளன. தபால்களை அனுப்ப விரும்பும் பொதுமக்கள் யாழ் நகரத்தபால்பெட்டிகளுக்குள் நாளைசனிக்கிழமை மாலை 3 மணிக்குமுன் தபால்களைச் சேர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ச)

## புலிகளைக் கண்டறிய மத்திய அரசு நடவடிக்கை

### - யேகப்

(கொச்சி)

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர்களில், விடுதலைப் புலிப் போராளிகளைக் கண்டறிந்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று உள்துறை இணை அமைச்சர் எம். எம். யேகப் கூறியிருக்கிறார்.

போராளிகள், மற்றும் ஊடுருவல் செய்பவர்களுக்கு எதிராக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கிறது என்றும் யேகப் தெரிவித்தார்.

## வரதன் இறந்துவிட்டதாக பொலிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் கட்டடத்திற்கு முன்பாக நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரால் தேடப்பட்ட நடராசா வரதன் அல்லது சிறீ ரகு என்பவர் தவறாக் கொலவில் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நவம். 7-9வரை அடுத்த சார்க் மாநாடு

(டில்லி)

பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்கிழக்கு ஆசிய அமைப்பின் (சார்க்) அடுத்த உச்சிமாநாடு நவம்பர் 7 முதல் 9 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறும்.

நேற்றைய தினம் மாலையில் முடிவடைந்த சார்க் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத் (8 ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

மணமக்கள் தேவையா?

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள் ஞாயிற்றுக் கிழமையில் சந்திக்கலாம். மகிளா ஏஜென்சி கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்.

(R/1508)

மில்க்வைற் சலவைத்தூள்

சிக்கனமான சலவை சிறப்பாக வெளுக்கிறது 50 கிறாம் பக்கற் ரூபா. 6/- மட்டுமே 100 வெற்றுப் பக்கற்றுகள் அனுப்பி அழகியகைவேலைப்பை அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(B/2769)


# தகவல் கொடுக்காதவரும் நாற்பது இளைஞர்களும் கைது

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற முப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து தனியார் கடை ஒன்றின் உரிமையாளர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பலமாகத் தாக்கப்பட்டதுடன் அங்கே தங்கியிருந்த வடபகுதி இளைஞர்கள் நாற்பதுபேர் வரையில் கைது செய்யப்பட்டனர்.

மாதகலைச் சேர்ந்த கொழும்பு வர்த்தக நிலைய உரிமையாளர் தனது கடையில் வடபகுதி இளைஞர்கள் தங்கியுள்ளனர் என அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தகவல் கொடுக்காததை அடுத்து அவ்வர்த்தக நிலையத்தை முற்றுகையிட்ட பொலிசார் வர்த்தக உரிமையாளரையும் அங்கே தங்கியிருந்த இளைஞர்களையும் கைது செய்தனர் தகவல் கொடுக்காததற்காகவே மேற்படி நிறுவன உரிமையாளர் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் மாதகலைச் சேர்ந்த இளைஞர்கள் எனவும் இவர்கள் வெளிநாடு செல்வதற்காக அங்கே தங்கியிருந்தார்கள் என்றும் தெரிய வருகிறது கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒரு சிலர் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டதாகவும் ஏனையோர் தொடர்ந்தும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ச)

## 10ஆம் திகதி சபாநாயகர் தெரிவு

(புதுடில்லி)

இந்தியாவின் பத்தாவது லோக்சபாவிற்கான சபாநாயகர் தெரிவு எதிர்வரும் 10ம் திகதி இடம்பெறவுள்ளது. சபாநாயகர் பதவியை பொதுவாக ஆளும் கட்சியே தன்வசம் வைத்துக்கொள்வதே மரபு என காங்கிரஸ் கட்சி கூறி வருகின்றது. ஆனால் சிறுபான்மைப் பலத்தைக் கொண்ட அரசு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை நாடுவதன் அறிகுறியாக சபாநாயகர் பதவி எதிர்க்கட்சிகளுக்கு விட்டுத்தரப்படல் வேண்டும் என பல எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

## இறந்துபோன

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னான். எங்கள்நிலத்தை நீங்கள் உரிமையாக்கிக் கொள்ள விரும்புவது போல அவரையும் உங்களுடைய உடைமையாக்கிக் கொள்ள இப்பொழுது நீங்கள் நினைக்கலாம். ஆனால் உங்களால் அது முடியாது. அவர் மனிதனின் கடவுள்; சிவப்பன் மீதும் வெள்ளையன் மீதும் அவர் ஒரே மாதிரிக் கருணை பொழிகிறார் இப்பூமி அவருக்குப் பிரியமானது. பூமிக்கு இழைக்கப்படும் கேடு அதைப் படைத்தவருக்கும் இழைக்கப்படும் அவமதிப்பாகும். வெள்ளையர்களும் ஒரு நாள் மறைந்தாக வேண்டும். ஒரு வேளை மற்ற இனத்தவரைவிட முன்னதாக உன் படுக்கையை நீ அசுத்தமாக்கினால், ஓரிரவு உன் கழிவிலேயே மூச்சடங்கிச் சாவாய்.

ஆனால் நீங்கள் அழியும் போது, இந்நிலத்துக்கு உங்களை அழைத்து வந்து, ஏதோ ஒரு சிறப்பு நோக்கத்தில் இந்நிலத்தின் மீதும், செவ்விந்தியர் மீதும் உங்களுக்கு ஆதிக்கத்தைத் தந்த கடவுளின் வல்லமையால் எரிக்கப்பட்டுப் பிரகாசமாக ஒளிர்வீர்கள். அந்த ஊழ்வினை 'எங்களுக்குப் புதிராக இருக்கிறது. ஏனெனில் எங்கள் எருமைகள் எல்லாம் கொல்லப்படும் போதும், காட்டுக் குதிரைகள் அடக்கப்படும் போதும், காட்டின் அந்தரங்கப் பகுதிகள் ஏராளமான மனிதர்களின் வாடையால் நிரப்பப்படும் போதும் எங்களுக்குப் புரிவதில்லை. புதர்க்காடு எங்கே மறைந்து விட்டது. கழுகுகள் எங்கே மறைந்து விட்டன. வாழ்வின் முடிவு - உயிர் பிழைப்பின் தொடக்கம்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**காசிப்பிள்ளை சங்கரப்பிள்ளை**

மண்ணில்: 10 . 06 . 1925

விண்ணில்: 15 . 07 . 1990

ஆண்டொன்று போனதையா உமைப் பிரிந்து
மீண்டுமொரு நாள் வருமா - கண்டு
பேசிட ஒரு பொழுது நும்பெருமை
காசினியில் வாழும் காலமெல்லாம்.

ஜெயமதி ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

(R/1510)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 07 - 05



கரும்புலி
கப்டன் மில்லர்



முருகன

1987 ஆம் ஆண்டு நெல்லியடி மத்திய கல்லூரியில் நிலை கொண்டிருந்த சிறிலங்காப் படையினரின் முகாம் தகர்ப்பின் போது வீரமரணமெய்திய

கரும்புலி கப்டன் மில்லர் (வல்லிபுரம் வசந்தன் - துன்னாலை)
மேஜர் கமல் (துரைரத்தினம் பரமேஸ்வரராசா - பருத்தித்துறை)
வின்சன் (சரவணமுத்து சரவணபவன் - பண்டிப்புலவு, நெடுங்கேணி)

மாலிசந்திக்கும் மந்திகைக்குமிடையில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
மகான் (சின்னத்தம்பி பஞ்சலிங்கம் - தாளையடி)

சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தம்பதிகள்

1989 ஆம் ஆண்டு தேசவிரோதிகளினால் கொல்லப்பட்ட

- முருகன் (கயிலாயபதி அன்பழகன் - அம்மான் வீதி, நாயன்மார்கட்டு)
- ரகு (மத்தக்குட்டி மனோகரன் - மணற்சேனை)
- கஜன் (மார்க்கண்டு நிசாகரன் - திருமலை)
- சந்திரன் (சந்திரவதனன் - பருத்தித்துறை)
- ஜோன்சன் (சூசைதாஸன் ஜோன்சன் - மயிலிட்டி)
- ஜோசப் (ஜோன்பிள்ளை ஜோசப் - அலவெட்டி)

1990 ஆம் ஆண்டு பொத்துவிலில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
சுந்தர் (தம்பிலுவில்)
ரமணன் (காரைதீவு)

கஞ்சிகுடிஆறுபகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
கஜமோகன் (கண்ணபுரம்)

பலாலிப்பகுதியில் சிறிலங்காஇராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமடைந்த
கப்டன் பிரதீப் (சுப்பிரமணியம் சதானந்தராசா - கொக்குத் தொடுவாய்)

10ஆம் கட்டையில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமடைந்த
கப்டன் திலகன் (வீரசிங்கம் திலகரட்ணம் - தம்பலகாமம்)

ஆனையிறவில் எதிர்பாராத விபத்தினால் எமைப்பிரிந்த
திலீப் (கந்தசாமி கண்ணன் - கல்லும்பிட்டி, கண்டாவளை)

கந்தளாயில் சிறிலங்கா இராணுவத்தினராலும் முஸ்லீம் ஊர்காவல் படையினராலும் கொல்லப்பட்ட 24 தமிழர்கள்

பச்சனூர் தேவாலயம் மீது சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட தாக்குதலுக்குப் பலியான 4 தமிழர்கள்

மூதூர், வெருகல், முகத்துவாரம், ஈச்சிலம்பத்தை பகுதிகளில் சிறிலங்காப் படை விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலினால் கொல்லப்பட்ட 38 தமிழர்கள்

சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலினால் கொல்லப்பட்ட 10 வயது தமிழ்ச் சிறுவன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

✻ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர். இவர்களில் கஜன் என்ற மாவீரர்பிரதேச படைத்துறை ஆணையாளராவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B: 2775)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி



மரணத்தை நான் நேசிக்கிறேன். அதனால் எம் மக்கள் விடுதலை அடைவார்கள் என்பதால்...


கரும்புலி கப்டன் மில்லர்

### தேசத்தைக் கற்போம்!

கல்விக்கு உலை வைக்க
எதிரியின் கங்கணச்....
கூக்குரல் இரைச்சல் .....
குண்டுகள் வீச்சு......
கூரைகள் நகர்வு.. —
சுவர்கள் தகர்வு......
படித்து வந்த பள்ளிகள் எங்கே?
பார்க்க ஒரு தடமோ
படிக்க ஒரு இடமோ
எல்லாமே அற்றுப் போய்!
போகட்டும்-

மரநிழல்
எமது கூரை!
இலட்சியம்
எமது சுவர்!
போர்க்களம்
எமது பள்ளிக்கூடம்!
கற்றல் என்பது
தேசத்தை!
கற்றல் என்பது
தேசத்திற்கு!


-பொ. சிவனேஷ்



பாண்டியன்குளத்திலிருக்கும் மாறனின் அம்மாவுக்கு பாம்புகடித்துவிட்டது. உடனே அவரை வைத்தியத்திற்காக அனுப்பிவைக்கவேண்டும். இச்செய்தியறிந்த போராளியொருவன் அவரது வீட்டிற்கு விரைந்தான். 'இந்த நேரத்தில் வேறு வாகனம் கிடைக்கிறது கஷ்டம்; ஆனபடியால் இயக்கத்திற்குச் சொந்தமான வாகனத்திலதான் அவரை வைத்தியசாலைக்கு அனுப்ப வேணும். எதற்கும் மாறனண்ணாவிடம் அனுமதிபெற்றுக்கொண்டு அவரை அனுப்பி வைப்பம்' இவ்வாறெல்லாம் தீர்மானித்தபடியே அவன் மாறன் இருக்குமிடத்தைச் சென்றடைந்தான்.

மாறனுக்கும் இச்செய்தி எட்டிவிட்டது. அவனும் வழியில் வந்துகொண்டிருந்தான். ஏற்கெனவே பொதுமக்களுக்கு இப்படியான ஆபத்து நேர்ந்த சமயங்களில் அவர்களைக் காப்பாற்ற இயக்கத்தின் வாகனத்தை எடுத்துச் செல்லும்படி மாறனே உத்தரவிட்டிருக்கிறான். ஆகவே இது ஒன்றும் பிரச்சினைக்குரிய விடயமல்ல என்றெண்ணிய அவன் 'அண்ணை எங்கட வாகனத்தை ஒருக்கா எடுக்கிறன். பாம்பு கடிச்சுப்போட்டுது...' தாய்க்கு இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றுவிட்டது என்பதை உடனே சொல்லக்கூடாது. படிப்படியாகத் தெரிந்துகொள்ளட்டும் என்று தீர்மானித்து விஷயத்தை மட்டும் முதலில் சொன்னான் அப்போராளி.

"இல்லை. இயக்கத்தின்ர வாகனம் இப்படி வேற தேவைகளுக்கு எடுக்கக்கூடாது" அப்போராளி கொஞ்சமும் எதிர்பார்க்காத பதில் மாறனிடமிருந்து கிடைத்தது. ஒரு விநாடி ஆடித்தான் போய் விட்டான் அவன். 'அண்ணை வந்து... உங்கட அம்மாவுக்குத்தான் கடிச்சு. வேறு யாராவதாக இருந்தாலும் இச்செய்தியைக் கேட்டதும் இரத்த பாசத்தை முகத்தில் காட்டியிருப்பார்கள் நாங்கள் சராசரி மனிதர்கள்தானே? ஆனால் மாறனோ அப்படியிருக்கவில்லை. 'என்ர அம்மா எண்டபடியாலதான் இயக்கத்தின்ர வாகனம் எடுக்கேலாது என்டு சொல்லுறன்' எல்லாம்கடந்த நிலையிலிருந்து பதிலளிக்கிறான் மாறன். மாறனின் குணத்தைத் தெரிந்த அப்போராளி மேலும் அவனுடன்





வாதாட விரும்பவில்லை. இப்போது அவசரமாகச் செய்ய வேண்டியது மாறனின் அம்மாவைக் காப்பாற்றுவது; எனவே அதற்கு ஒரு மாற்று ஒழுங்கைச் செய்ய வேண்டும். ஆகவே அவன் திரும்பிவிட்டான். அவன் பின்னே மாறனும் தாயை நோக்கிச் சென்றான்.

இச்சம்பவத்தை இன்றென்ன என்றுமே பாண்டியன்குளம் மக்கள் மறக்கமாட்டார்கள். இன்றும் அவனது தந்தை இதைத்தான் கூறுகிறார். "அன்டைக்கு இந்த விஷயத்தில் என்ர மகன்ர நடத்தையை நான் ஏற்றுக்கொள்ளுறன். இயக்கத்தின்ர கடும் கட்டுப்பாட்டின்படி, முன்மாதிரியா என்ர மகன் நடந்துகொண்டதுக்காக பெருமைப்படுகிறேன்.'

இதுதான் மாறன். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மகேந்திரராசா குறிப்பிட்டதுபோல 'ஒரு போராளி வாழும்காலத்தில் அவனது வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டும். அவன் இறந்தபின் அவனதுவாழ்க்கை பாடவிதானமாக இருக்க வேண்டும்' என்ற கூற்றுப்படி ஒரு முழுமையான போராளியாக வாழ்ந்து காட்டியவன் மாறன்.

அதனால்தான் வன்னிமண்ணில் அவனுக்கென்று தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவன் அந்த மக்களை எந்தளவுக்கு நேசித்தானோ அந்தளவுக்கு வன்னி மக்களும் அவனை நேசித்தார்கள். அதுவே போராட்டத்தை நேசிக்கும் தன்மையை வளர்த்தது. இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கும் முகங்கொடுக்கக்கூடிய தன்மையை வளர்த்து போராட்டத்தையும் பாதுகாத்தது. இவனை வன்னி மக்கள் எந்தளவுக்கு நேசித்தார்கள் என்பதற்கு சிறு உதாரணம். இராணுவக் கெடுபிடிகள் உள்ள ஒரு ஊரில் ஒருநாள் இரவு இவன் தங்க வேண்டியிருந்தது. வழக்கம் போல தான் தங்குவதற்கு மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ள ஒரு குடிசையை தேர்ந்தெடுத்தான் இவன். இவனைப் படுக்கவைப்பதற்கு தங்களிடம் உள்ள வசதி போதாது என நினைத்தனர் அக்குடும்பத்தினர். வீட்டில் உள்ளவற்றில் குறைவாகக் கிழிந்த ஒரு பாயில் தலையணை போட்டுவிட்டு கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த தகரப் பெட்டியொன்றினுள் மிகப் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த கூறைச் சேலையை எடுத்து விரித்து அதன்மேல் படுக்குமாறு இவனை வேண்டினர். அவர்களது செயலைப் பார்த்த மாறனுக்கு கண் கலங்கியது. எமது தமிழ்ப் பண்பாட்டின்படியும், பொதுவாகவும் திருமண சேலையை இறுதிவரை பாதுகாத்து வைக்கும் வழக்கம் எல்லோருக்கும் உண்டு. திருமண ஞாபகார்த்தமாக இருக்கும் அந்தக் கூறையை தனது படுக்கைக்காக... அவர்களது அன்பின் ஆழத்தை வியந்தான். அதேவேளை அச்செயலை அவனால் ஏற்றுக்கொள்ளமுடியாமலிருந்தது. 'நீங்கள் என்ன மாதிரி படுக்கிறீங்களோ அதே மாதிரியே நானும் படுக்கிறன். இப்பிடியெல்லாம் செய்து என்ன நீங்கள் எட்டவைக்காதேங்கோ' என்று அவர்களை அன்பாகக்கடிந்து கொண்டு அவர்களைப் போலவேவெறும் பாயில் படுத்துக்கொண்டான் மாறன்.

மாறனிடம் தலைமைத்துவப் பண்பு நிறைந்திருந்தது. தான் செய்யவேண்டிய வேலைகள் பற்றிய அமைப்பு முறைகளுக்கு மாதிரிவடிவம்போட்டு திட்டமிட்டு தனது கருமங்களை ஆற்றி வந்ததால்தான் வன்னிப்பகுதியில் விடுதலைப் போராட்டம் பாரிய வளர்ச்சி



### மேஜர் மாறன்

யைப்பெற்றது. இராணுவ, அரசியல்வேலைகளுக்காகவன்னிப் பகுதிக்கு முதன்முதல் அனுப்பப்பட்டவன் இவனே. கருத்தரங்கு, பிரசுரங்கள், சுவரொட்டிகள், மக்கள் கொடர்பு, சமூகக்குறைபாடு ஒழிப்பு போன்ற விடயங்களில் விசேடகவனமெடுத்து செயற்பட்டதால்தான் இவனால் மக்களை வென்றெடுக்க முடிந்தது.

இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில்கூட காட்டுக்குள் இருந்து உணர்வு, சுதந்திரப் பறவைகள், நெருப்பு போன்ற வெளியீடுகள் வெளிவந்தவென்றால் அது மாறனின்திறமையான செயற்பாடே. மிகக்குறைந்த வசதி உள்ள அந்தக் காலத்திலும் காத்திரமான பணிகளை மேற்கொண்டான் இவன்.

கிராமங்களில் வறிய விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுமுதல் இடம்பெயர்ந்த சிறார்களின் கல்வியைத் தொடர ஏற்பாடு செய்வது, உற்பத்தியை இலக்காகக் கொண்ட கல்விக்குப் பதிலாக மண்ணை நேசிக்கும் கல்வியைப்பெற ஏற்பாடு செய்வது வரை சகலவிதத்திலும் மக்களினுள் இவன் ஊடுருவியிருந்தான்.

அதாவது கிராமப்புறங்களை போராட்டத் தளங்களாக மாற்றி அங்கிருந்து நகரப் பகுதிக்கு போராட்டத்தை நகர்த்துவதே இவனது குறிக்கோள். இவனது எதிர்பார்ப்புப் போலவே எத்தனை வல்லரசுப்படைகள் வந்தபோதும் எத்தனை துன்பங்கள் நேர்ந்தபோதும் போராளிகளைப் பாதுகாக்கவேண்டும் என்ற உணர்வை பெற்றனர் வன்னிமக்கள்.

இராணுவ முற்றுகை, உண்ணிக்கடி, பட்டினி, மருத்துவ வசதியின்மை போன்றவற்றுக்கிடையே போராளிகள் தெம்புடன் இருந்தார்களென்றால் அதற்கு மாறனின் திட்டமிட்ட நடவடிக்கைகளும் ஒரு காரணம்.

எல்லாப் போராளிகளையும் போலவே களத்தில் குதிப்பது இவனுக்கும் பிடித்தமான விடயம். இவனது பயிற்சி முழுவதும் எதிரிகளுடனான சண்டை என்றே அமைந்திருந்தது. ஒரு இராணுவ நடவடிக்கைக்காகச் செல்லும்போது இவனையும் இன்னும் மதின்மூன்று போராளிகளையும் நாம இழந்தோம்.

இன்று பல குட்டி மாறன்கள் வன்னியில் இவன் விதைத்த விடுதலை விதை மரமாகி விழுதுகள் விட்டு நிற்பதை அவர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள் அவர்கள் ஓயப்போவதில்லை. ஏனெனில் அப்படி எதையும் அவர்களுடைய மாறன் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவில்லை.

# "புரிதல்"

சிறுகதை

**இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**

இந்த சிறுகதை தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வெளியிட்ட முத்தமிழ்விழா மலரில் இருந்து நன்றியுடன் பெறப்பட்டதாகும்.

வானம் சுதந்திரமாக இருந்தது. வெளிர் நீல நிறத்தில் அதன் அழகு பிரமிப்பைத் தந்தது. எப்படி இருந்தும் என்ன பிரயோசனம்?

வானம் மாத்திரம் சுதந்திரமாகவும் அழகாகவும் இருந்தால் மட்டும் போதுமா? என்ற நினைப்பும் அவனுள் எழுந்தது

தலைக்குமேலே மாமரத்தின் கிளைகளில் பகைமை பிரகாசித்தது. ஒன்றை பொன்று கலைத்து வந்த இரண்டு அணில்கள் ஒருசெக்கன் நின்று அவனை விநோதமாகப் பார்த்துவிட்டு மீண்டும் பாய்ந்தன.

நல்ல காலம். சுலோசனா காணவில்லை. என அவன் நினைத்தான். அவள் கண்டிருந்தால்,

''பார்த்தீங்களே! இந்த அணில்களும் உங்கடையாக்கள் மாதிரி என்னை வினோதமாய்ப் பார்க்குதுகள்'' என்றுதான் சொல்லுவாள்,

அவள் சுபாவமே இப்படித்தான். எதையும் சமாளித்து அனுசரித்துப்போகும் பழக்கம் மிகவும் கஷ்டமான காரியம்.

மனம் மீண்டும் இயற்கையுடன் ஒன்றிப் போயிற்று. பெரிய வளவில் நெருக்கமான மரங்கள், மா, பலா, அத்தனையும் இருந்தன. ஒரு புறத்தில் வாழையும் கூட வேண்டாம், வேண்டாம் என்று பூஞ்செடிகளும் தான்.

தண்ணீர் இல்லாமல் எல்லாமே சோர்ந்து போய், அகதிகளாய் இருக்கும் நம்மவர்கள் போல இருந்தன

பார்வை அப்பால் வளைந்து போயிற்று மதிலைத் தாண்டி தூரத்தில் தெரிந்த பனை மரங்களை கண்கள் கவ்விக்கொண்டன. அதன் கம்பீரமும் உயரமும் மனதுக்கு இதத்தைக் கொடுத்தது.

எங்கள் வாழ்க்கையின் குறியீடாகத்தான் இந்த மண்ணில் பனை இருக்கிறது என அவன் நினைத்தான். என்ன கஷ்டம் வந்தாலும் அதன் தோற்றத்தில் என்ன தளர்ச்சி வந்து விடப்போகிறது?

பொருளாதாரத்தடை வந்து மண்ணெண்ணையைக் காண்பதே கஷ்டமாகி நீர் இறைப்புகளும் கனவாகி பசுமையான பயிர்கள் எல்லாம் காய்ச்சல்காரர்கள் மாதிரி ஆனபின்னரும் கூட பனை மரங்கள் என்ன மாதிரி உறுதியாக நிற்கின்றன.

பனைகளைப் பார்க்க அவனுக்கு பெருமிதமும் சந்தோசமுமாகவும் இருந்தது. ஆனால் எத்தனை பேர் இதனை உணர்ந்து கொள்கிறார்கள்.

வேலைக்குப் போகும் நேரங்களைத் தவிர சாய்மனைக்கதிரையைக்கொண்டு வந்து இந்த மாமரத்தின் கீழ் போட்டு அவன் இயற்கையோடு ஒன்றி விடுவது வழக்கமாகி விட்டது.

வீட்டினுள் இருப்பது அவனுக்கு சங்கடமான விடயம். என்னதான் இருந்தாலும் இருப்பது அன்னிய வீடு. எதைச்செய்வதாக இருந்தாலும் கேட்டுத் தான் செய்ய வேண்டும். வீட்டுக்காரர்களின் முகம் என்ன விதத்தில் மாறுகின்றது என்று பார்த்துப் பார்த்து....

வாடகை வீடு எடுத்துக் கொண்டு போகலாம் என்றாலும் சுலோசனாவுக்குச் சம்மதமில்லை. ''அக்கா கோவிப்பா அத்தான் பேசிக்கடிதம் போடுவார்'' என்றெல்லாம் சொல்லுவாள்.

சுலோசனாவின் அக்காவின் புருஷன் பிள்ளைகள் மூன்று பேரும், அவனும் சுலோசனாவும் இந்தவீட்டில் அகதிகளாக தஞ்சம்புகுந்த மாதிரி சுவிஸில் தஞ்சம் புகுந்து இருந்தார்கள்.

சுலோசனாவின் அக்கா இந்தப் பெரிய வீட்டில் தன்னுடைய மற்றொரு மகளுடனும் சகல வசதியுடன் அரசோச்சிக் கொண்டிருந்தாள். வீட்டில் இருக்கும் மகள் கூட விரைவில் வெளிநாட்டு அகதியாக ஆயத்தம்.

சுலோசனாவின் அக்காவின் வசதிகளும் வெளிநாட்டு வருமானமும் தான் சுலோசனாவுக்கு அக்காவின் மீது தீராத அன்பை வளர்த்திருக்க வேண்டும் என அவன் நினைப்பதுண்டு

அக்காவின் வீட்டில் இருப்பதைப் பெருமையாக சுலோசனா நினைத்தாலும் மின்சாரம் இல்லாததால் தண்ணீர் அள்ளிக்கஷ்டப்படுவதை இரவு நேரத்தில் குப்பி விளக்கில் ரீ.வியின் வெறுந் திரையைத் தரிசிக்கும் நேரங்களிலும் அவள் படுகின்ற பாட்டை அவனால் ரசிக்க முடியவில்லை.

கிணற்றின் உட்சுவரில்வாளி அடிபடும் சத்தம் கேட்டது. தலையைத் திருப்பினான் அவன். சுவரில் வாளி அடிக்க அடிக்க தண்ணீர் அள்ளுவது சுலோசனாவாகத்தான் இருக்கும்.

கிணற்றடியில் சிவப்பு சோட்டி தெரிந்தது. அவன் எதிர்பார்த்த படி சுலோசனா தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்தாள். அவளும் தற்செயலாக அவனைப் பார்த்தாள்

அவள்பார்வையில் இனிமை மின்னவில்லை. சாடையான கடுமை- அவனைத் திட்டித் தீர்க்கும் கடுமை அதில் பிரதிபலித்தது.

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். அவள் சிரிக்கவில்லை. அவள் சிரிக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும்.

எழுந்து கிணற்றடியை நோக்கிநடந்தான். சுலோசனா ஒரு வாளி தண்ணீரைக் கொண்டு வந்து வாளிக்குள் ஊற்றிவிட்டு, மறு வாளிக்காக கிணற்றின் உள் சுவரை இடித்துக் கொண்டிருந்தாள்.

'என்னப்பா' என்றான் கிணற்றின் கட்டில் இருந்தபடி.

'ம்' என்று தான் அவள்' பதில் சொன்னாள்.

'ஏனப்பா கோவிக்கிறாய்... அவள் பதில் சொல்லாமலே தவிர்த்தாள். துலாக் கயிற்றைப் பிடிச்சுப் பிடிச்சு கையெல்லாம் புண்ணாய்ப் போச்சு' என்றாள் அவள்

என்னப்பா செய்யிறது, இந்த நேரத்தில் என்ன செய்யலாம். இந்தப் பிரச்சினை எங்களுக்கு மாத்திரமே. ஊரோடை எல்லாரும். ஏன் எல்லாத் தமிழ் சனத்துக்கும் தானே'

'நீங்கள் உங்கடை சித்தாந்தத்தை உங்களோடை வைச்சுக் கொள்ளுங்கோ. என்ரை நெஞ்சு எரியிற எரிவு எனக்குத்தான் தெரியும்.'

'நீ படுகிற கஷ்டம் உனக்கு மாத்திரம் தான் என்டே நீ நினைக்கிறாயப்பா, எத்தினை லட்சம் சனம் என்னென்ன மாதிரி எல்லாம் கஷ்டப்படுதுகள். அதெல்லாம் உனக்குத் தெரியாதே.'

'தெரிஞ்சு என்ன செய்யிறது. என்ரை தலை விதி என்றாள் சுலோசனா.

தண்ணீர் அள்ளி முடிந்து வாளியை கையைவிட அது ஆடுகாலில் போய் படீர் என அடித்தது.

அவனுக்கு பட்டென்று கோபம் வந்தது. 'என்னப்பா நீ வாளியை உப்பிடி அடியடவிட்டால் அது தெரியாதே; இரவல் வீட்டில் வந்திருந்து கொண்டு உப்பிடிச் செய்ய அவை என்ன நினைப்பினம்.'

இது என்ன பிறத்தியார் வீடே அக்காவின்ரை வீடு தானே. அவ ஒண்டும் பெரிசாய் குறை நினைக்க மாட்டா. நீங்கள் உங்கடை ஆக்கள் மாதிரி என்ரை வீட்டாக்களையும் நினைக்காதேங்கோ'

அவன் சுலோசனாவை நுட்பமாகப் பார்த்தான்.

'உன்ரை ஆட்களின்ரை வீடோ என்ரை ஆக்களின்ரை வீடோ, அதுவல்ல இப்பபிரச்சினை. இப்ப நாங்கள் இருக்கிறது இரவல் வீடு, அதுவும் தலைக்கு மேலால செல்விழுக்க அகதிகளாய் ஓடி வந்து தஞ்சம் புகுந்திருக்கிறம். அதை மாத்திரம் மறந்து போகாதை'

'அகதி என்டு சொல்லி இஞ்சைவந்து என்னசிரட்டையுக்கையே தண்ணி குடிக்கிறீங்கள். நீங்கள் அகதியாய் ஓடி வந்திட்டீங்கள் என்டு உங்கடையாக்கள் வந்துஎன்ன வெட்டியே விழுத்தினவை. என்ரை அக்கா இருந்தபடியால் தானே; வா - சுலோசனா இந்தப் பெரிய வீட்டில இருக்கலாம் என்டு சொன்னவ' என்றாள் பெருமிதத்துடன்.

அவன் கோபம் தணிந்திருந்தது. 'சுலோசனா நான் உன்னோடை போட்டி போட வரேல்லை. என்ரையாக்கள், உன்ரையாக்கள் என்டுதானும் உன்னைப்போல பேய்க் கதை கதைக்க விரும்பேல்லை. ஆயிரம் தான் நீ சொன்னாலும் எங்கடை சொந்த வீடு மாதிரி எதுவும் வராது.'

'நீங்கள் ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொண்டு சொல்லுவியள் நெடுகஉப்பிடித்தானே நீங்கள் கலியாணம் முடிச்சு இவ்வளவு காலமாச்சு. எப்பதான் அக்கா வீடு, தங்கச்சி வீடு என்று விட்டிருக்கிறியள்.' என்னும் பாதே அவள் கண்கள் கலங்கின.

1990 ஆம் ஆண்டு தீபாவளி அன்று 'செல்கள்' அவர்கள் இருந்த வீட்டுப்பகுதியை சுகம் விசாரிக்கத்தொடங்கின. கண் முன்னாலேயே எதிர் வீட்டு நடுக்கூரையைப் பிளந்து கொண்டு ஒரு செல் விழுந்தது

இன்னத்துரைக் கிழவரும் அவரின் பேத்தி பத்மாவும் கொடூரமாக உடல் சிதறி மரணித்தார்கள்.

பெருங் குரலெடுத்து அழுத சுலோசனாவின் அழுகையை நிறுத்த அவன் பெரும் பாடு பட்டான்,

கையில் அகப்பட்ட பொருட்களுடன் அவர்கள் சைக்கிளில் புறப்பட்டார்கள். நல்ல வேளை பிள்ளைகள் இல்லாமல் போனது என்றுகூட அப்போது நினைத்தான்.

வாய்க்கால் வழியால் ஓடும் நீரைப்போல் சனங்கள் சுமைகளுடன் தங்கள் வீடுகளை விட்டும், கிராமங்களை விட்டும் தயக்கத்துடன் இடம் மாறிக் கொண்டிருந்தார்கள்.

தலைவிரி கோலமாக சைக்கிளில் இருந்த சுலோசனாவின் பேச்சுக்களைப் பொறுமையுடன் செவிமடுத்தான் அவன்.

சும்மா இருக்கேலாமல் அவங்களோடைசண்டைபிடிச்சு இப்ப பாருங்கோ நாங்கள் படுகிறபாட்டை.''

'ஐயோ வீடு எப்படி நாசமாய்ப் போகுதோ. ஐயா கஷ்டப்பட்டு உழைச்சு எனக்கு ஆசையாய்க் கட்டித் தந்தவீடு நான் சின்னப்பிள்ளை தொடக்கம் விளையாடின மாமரம், கிணற்றடி எல்லாத்தையும் விட்டுப்போட்டு எப்படி இருக்கப்போறன் என்று அவள் பலவாறாகச் சொல்லிப் புலம்பினாள்,

புறப்பட்டவுடன் சுலோசனாவின் அக்கா வீட்டுக்குத்தான் முதலில் வந்தார்கள். பிறகு இடைக்கிடை போய் வீட்டுச் சாமான்களைக் கொண்டு வந்து சேர்த்தாலும் அங்குபோய் குடியிருக்க முடியவில்லை, இப்போது கொழும்பில் நம்மவர்கள் சொந்த வீடு வாங்கி வைத்திருப்பது போல அக்கா வீட்டை பெருமையாகிப் போய்விட்டது சுலோசனாவுக்கு.

வரும் காலங்களில் சுலோசனாவின் அக்காவும் வெளிநாடு போக வீட்டை முழுமையாக பொறுப்பேற்க வேண்டி வரும் என்றெல்லாம் சுலோசனா சொல்லிக்கொண்டுஇருந்தாள்

'இப்ப ஏன் அழுகிறாயப்பா இப்ப தான் உன்ரை அக்கா வீட்டில இருக்கிறாய் அவவோடை உயிரும் பிராணனுமாய் இருந்து சந்தோசமாய் சிரிக்கிறாய். பிறகென்ன பிரச்சினை' என்றான் அவன்.

நீங்கள் என்ன நக்கலே அடிக்கிறீங்கள்' என அவள் கோபத்துடன் கேட்டாள்.

'இல்லையப்பா நான் ஏன் கோபிக்க வேணும். இது உன்ரை அக்கா வீடு நீ அவவோடை சந்தோசமாய் இருக்கிறாய் வேறை என்ன பிரச்சினை வரப்போகுது.'

சுலோசனாவின் முகத்தில் திருப்தி தெரியவில்லை, தன்னை அவன் கேலி செய்வதாக அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

ஆரால நாங்கள் இஞ்சை வந்து அகதியாய் இருக்கிறம் என்டு தெரியுமே. உங்களுக்கு அதுகளைப்பற்றி எப்பவாவது யோசிச்சனீங்களே சும்மா இருக்கேலாமல் அவங்களோடைசொறிஞ்சு சொறிஞ்சு எங்கடை நிம்மதியன்போனது தான் மிச்சம். அதுகள் ஒன்

(6ஆம் பக்கம் பார்க்க)



கவிதை

## கரும்புலியின் குரல்

செல்கிறேன்!
அதற்கு முன்பாகச்
சில செய்திகள்
சொல்ல விழைகிறேன் ! !

மீண்டும் நாம்
சந்திப்பது சாத்தியமில்லை.
மீளாத் துயிலில் உறங்கும்
நேரம் உணர்ந்து செல்கிறேன்

சோகச் சுமைகளைத் தூக்கி எறி
தேச விடுதலைப் பணியில்
வேகமுடன் முன்செல்லும்
சேனையில் நீயிரு.

அன்னை தந்தை உடன் பிறப்பினர்
அன்பினால் இணைந்த அனைவர் நினைவும்
என்னுடன் கூடவே இருக்கும்
நான் வாழ்ந்த காலம் வரலாறாகும்
ஆதலால்

கண்ணீர் யாரும் விடவேண்டாம்.
மண்மீட்புப் போரில் அனைவரும்
எண்ணம் ஒன்றாய் இருந்தல் ஒன்றே - இக்
கணத்தில் எம் மக்கள் வேண்டுவது.

மீண்டும்
எம்மவர் வெற்றியை உறுதி செய்திட
தோன்றும்
கரும்புலிக் கூட்டத்தின் மத்தியில்
வெடிகுண்டுகளாகப் பிறப்பெடுப்போம்.
சுதந்திரக் காற்றை எம்மவர் சந்ததி
சுதந்திரமாகச் சுவாசிக்கட்டும்.

-இனியவன்

வடமராட்சி 'லிபரேஷன் ஒப்பரேசனில்' இலங்கை-இந்திய அரசுகள் அடைந்திருந்த தன்னம்பிக்கையை மில்லரின் தற்கொலைத் தாக்குதல் தகர்த்தெறிந்தது! இராணுவ நடவடிக்கையில்

இல்லையை உட்கொண்டு மரணம் அடையும் முறை ஏறக்குறைய ஜப்பானிய 'கறகிறி'க்கு ஒப்பானது.

'கறகிறி' யையும் விடமுன்னேறிய ஒருகட்டமே தற்கொலைப் படைத் தாக்குதலாகும். இரண்டாம் உலக

யர் பெற்றிருந்த அதே முக்கியத்துவத்தை, அதனைவிடவும் கூடிய முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைத் தாக்குதல் தமக்குப் பெரும் சவால் என்று இலங்கை அரசு வெளிப்படை

அரச இராணுவத்தின் மனோவலிமையும் உயர்ந்திருந்தது; இந்தக் கட்டத்தில் நிலத்தை எதிரி கைப்பற்றி இருந்தபோதிலும் மக்களின் மனங்களை அவனால் கைப்பற்ற முடியவில்லை ஆயினும் மக்களிடம் ஒரு நம்பிக்கை இன்மையும், இந்தியாவை நோக்கிய கை நீளலும் வளர்ந்திருந்தது.

இத்தகைய சூழலில்தான் மில்லரின் தற்கொலைத் தாக்குதல் 1987 யூலை 5ஆம் திகதி இடம்பெற்றது. இத்தாக்குதலின் போது மூன்று உயர் அதிகாரிகள் உட்பட 76 இராணுவத்தினர் பலியாகினர். 61 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலைக் கண்டு இந்திய அதிர்ச்சி அடைந்தது. இலங்கை அரசு அசமந்து போனது

தாக்குதலில் பெண்கள் பெரிதும் இன்னலுக்கு உள்ளானார்கள் என்று கூறிய அவன் நாங்கள் அனைவரும் தற்கொலைப்படையாக மாறியேனும் எதிரியை நிர்மூலமாக்குவோம் என ஆவேசமாகக் கூறினார் சில தினங்களின் பின்பு மில்லரின் தாக்குதல் இடம்பெற்றது திலீபன் என்னை மீண்டும் சந்தித்தார்.

சாரணன்

# உணர்வுகளின் சங்கமம் மில்லருடன் திலீபன்!

மூலம் விடுதலைப் புலிகளை கீழ்நிலைக்கு ஒதுக்கிவிட்டு ஒரு சமரசத் தீர்வு காணமுடியும் என இலங்கை அரசு நம்பியது. இலங்கை அரசின் இத்தகைய இராணுவ நடவடிக்கை புலிகளைப் பலவீனப்படுத்தும் என்றும், அதன் பின்பு புலிகள் மீது எத்தகைய தீர்வையும் திணிப்பது இலகுவாக அமையும் என்றும் இந்திய அரசு கணக்குப் போட்டிருந்தது. மில்லர் இராணுவ முகாமை மட்டுமன்றி இவ்விரு அரசுகளின் இத்தகைய கணிப்பீடுகளையும் கூடவே தகர்த்தான்.

உலகின் தலைசிறந்த தற்கொலைப்படை என்ற பெயரை வரலாற்றில் பெற்றிருந்தது ஜப்பானிய 'நிப்போன்' தற்கொலைப் படையாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தில் இத் தற்கொலைப்படை அதிக பிரபல்யம் அடைந்ததுடன் எதிரிக்கு கிலியையும் கொடுத்தது. ஜப்பானியரிடம் 'கறகிறி' எனப்படும் தற்கொலை மரபு காலம் காலமாக உண்டு. ஜப்பானிய வீரன் தனது குத்துக் கத்தியினால் தன்னைத் தற்கொலை செய்துகொள்வதே இத்தகைய முறையாகும் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் சயனைட்

மகா யுத்தத்தின்போது பிரித்தானியாவின் 'குயின் எலிசபெத்' எனப்படும் யுத்தக் கப்பலை ஒரு ஜப்பானிய தற்கொலை வீரன் நிர்மூலமாக்கினான்.

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்த ஜப்பானிய தற்கொலை யுத்தமுறை தன் பிர



கரும்புலி கப்டன்

**மில்லர்**

பல்யத்தை பெருமளவு இழந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழீழ விடுதலைக்கு இதனை ஒரு சாதனமாகப் பயன்படுத்தத் தொடங்கியபோது, முன்பு ஜப்பானி

யாகவே ஒப்புக்கொண்டுள்ளது

இந்த வகையில் இத்தகைய தாக்குதலின் முதல் நபரும், முன்னோடியும் என்ற வகையில் மில்லரின்தாக்குதலது முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்தல் அவசியம் ஆகும்

இத்தாக்குதல் பற்றிய விபரணத்தை நோக்குவோம். பின்பு ஒரு மதிப்பீட்டிற்கு வருவோம்.

யாழ். குடாநாட்டின்மீதான தாக்குதலின் ஒரு கட்டமாக வடமராட்சி 'லிபரேஷன் ஒப்பிரேஷனை' இலங்கை அரசு மேற்கொண்டது. கட்டடங்களை நிர்மூலமாக்கியும், மக்களை அழித்தொழித்தும் தனது இராணுவ நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. யூகஅமைச்சர் பாணியில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேரடியாகக் களத்தில் நின்றார்; அவரே விமானத்திலிருந்து பீப்பாக் குண்டுகளை குடிமனைகள் மீது உருட்டிவிட்டதாக ஓர் அபிப்பிராயம் நிலவுகின்றது. பெரும் அழிவுகளை இந்த இராணுவத்தாற் செய்ய முடிந்ததென்பது உண்மை. இதனைத் தொடர்ந்து



தியாகி திலீபன்

இத்தாக்குதலின் அரசியல் முக்கியத்துவத்தைப் பார்க்க முன்னர் இத்தாக்குதல் சம்பந்தமான சில விபரங்களைப் பார்ப்போம். வடமராட்சி ஒப்பிரேஷன் நடந்ததைத் தொடர்ந்து தியாகி திலீபன் என்னைச் சந்தித்தார். திலீபனின் இயல்புகள் எனக்கு நன்கு தெரியும் அவன் பெண்கள் மீது அதிக பரிவுள்ளவன்; பாலியத் தூய்மைவாதி. இத்

கடைசியாக நான் மில்லரை முத்தமிட்டு அனுப்பியது வரை தற்கொலைத் தாக்குதல் பற்றி பலவிபரங்களை என்னிடம் கூறினார். அவ்வாறு விபரிக்கையில் இரண்டு கட்டங்களில் திலீபன் பெரிதாக அழுதான்.

ஒன்று கரும்புலிகளில் யார் தாக்குதலை மேற்கொள்வது என்பது பற்றி தீர்மானிக்க, துண்டு குலுக்கிப் போட்ட போது மில்லர் தனது கையைப் பிடித்துத் தடுத்ததாகவும், தானே அந்த முதல் நபர் என்று மில்லர் கூறியதாகவும் கூறும்போது திலீபன் பெரு வேதனையுடன் அழுதான். இறுதியாக தான் தொங்கல் வரை சென்று முத்தமிட்டு அனுப்பி வைத்த கதையைச் சொல்லும்போதும் அழுதான் உண்மையில் மில்லர் எந்தக் கணத்தில் வீரமரணம் அடைந்தானோ அந்தக் கணமே திலீபனும் மில்லருடன் சங்கமமாகிவிட்டான் என்றே கூறலாம்.

இவ்வாறான பெரும் பாசம் மிகு உயிர்த்தியாகத்துடன் மில்லர் எதிரியைச் சிதறடிக்கச் செய்தான். போராட்டம் விடுதலையை நோக்கி வலுவடையக்கூடிய சாத்தியங்கள் இருப்பதை எதிரிகள் உணர்ந்தனர். இனியும் காலந்தாமதிக்காது ஒரு சமரசத்திற்கு வரவேண்டும் என்ற முடிவுக்கு இலங்கை - இந்திய ஆட்சியாளர் வந்து சேர்ந்தனர். போராட்டம் பற்றிய எதிரியின் தப்புக் கணக்கை மில்லர் தகர்த்தெறிந்தான்.

# திருமலை ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து சிங்கள பேரினவாதிகளிடம் சென்றது!

1957 ஒக்டோபர் 15ஆம் திகதி திருக்கோணமலைதுறைமுக சமுத்திரத்தில் ஒரு திருப்புமுனை அந்நிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு சிங்கள ஆக்கிரமிப்பாளர் கையிற்கு கடற்படைத்தளம் சென்றது. அன்று சரியாக காலை 10.07க்கு ஐக்கிய ராச்சியத்தின் (பிரித்தானியா) கொடி இறக்கப்பட்டு இலங்கையின் வானேற்றிய சிங்கக்கொடி ஏற்றப்பட்டது. பிரிட்டனில் பதில்தூதுவர் குரொஸ்ட் வெய்ட் அவர்களால் இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவிடம் துறைமுகம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

பிரிட்டிஷார் துறைமுகத்தைக் கையளிக்கும்போது ஏறக்குறைய 10,000 தொழிலாளர்கள், 100க்கு மேற்பட்ட பாரம் தூக்கிகள், பல களஞ்சிய அறைகள், 100 பாரிய எண்ணெய்க் குதங்கள் என்பவற்றுடன் 1942இல் ஜப்பானின் விமானத் தாக்குதலால் சேதமடைந்த கப்பலொன்றையும் விட்டுச் சென்றனர்.

இவர்களின் வெளியேற்றம் இத்தளத்தின் பாவனையைக் குறைத்தபோதிலும், ஓர் வர்த்தகத் துறைமுகமாக தொடர்ந்தும் பயன்பட்டு வந்தது. நிர்வாக ரீதியாக முற்றுமுழுதாக தமிழரை மட்டும் கொண்ட 10க்கு மேற்பட்ட முதலாளிகளின் கூட்டு நிறுவனங்களினாலும், அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களாலும் துறைமுகம் தொடர்ந்தும் இயங்கத் தொடங்கியது. ஆயினும் கொழும்பு, காலி போன்ற துறைமுகங்களின் அபிவிருத்தியில் காட்டிய அக்கறையில் சிறிதளவேனும் திருமலை

துறைமுகப் பராமரிப்பில் அரசாங்கம் காட்டத்தவறியதால் பல இயந்திர சாதனங்கள் பழுதடைந்து போயின.

இலங்கையின் இடதுசாரிகள், பதவியிலுள்ள அரசாங்கங்களை துறைமுக வேலை

அத்துடன் இத்துறைமுகத்தைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர விரும்பிய இனவாதசக்திகளுக்கும் இது உவப்பானதாக இருந்தது. அப்பொழுது கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்த டாக்டர் தாக

திருக்கோணமலைத் துறைமுகமானது ஒரு குடாவினுள் அமைந்துள்ளது. துறைமுகத்தினுள் கடல்வழியாக நுழைவதற்கு ஒரேயொரு ஒடுங்கிய வாசல் மட்டுமே உள்ளது. இதன் அகலம் ஏறத்தாள 500 யார்களாகும். இதனை பிரிட்டிஷார் பாரிய இயந்திரங்களால் இயக்கப்படும் இரும்பு வலைக்கதவுகள் மூலம் மூடியிருந்தனர். இதன் மூலம் துறைமுகத்தினுள் உள்ள கப்பல்களை நீர்மூழ்கிகளின் தாக்குதல்களிலிருந்து காக்கமுடிந்தது. பின்னர் இவை பராமரிப்பு இன்மையால் பழுதடைந்தன. துறைமுகத்தின் நீளம் ஏறத்தாள 4 மைல்களாகும். கடலின் ஆழம் 90 அடிகளாகும்.

நிறுத்தங்கள் மூலம் செயலிழக்கச் செய்தபோது தனியாரிடம் இருந்த இத்துறைமுகம் அரசுகளுக்கு கைகொடுத்து உதவியது. அதனால் இத் துறைமுகம் 'தேசியமயப்' படுத்தப்பட வேண்டுமென்ற போராட்டம் தொடங்கியது;

நாதனால் முன்வைக்கப்பட்ட தொழிலாளர்களுக்குத் துறைமுகத்தைச் சொந்தமாக்கும் 'நாகநாதன் திட்டம்' இடதுசாரிகள் போராட்டத்தால் கைவிடப்பட்டு 1967இல் துறைமுக அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது

இதன்மூலம் ஊழியர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி, இடமாற்றம் என்பன ஏற்படுத்தப்பட்டன. அதாவது இடமாற்ற மூலம் வேறொரு துறைமுகத்திலிருந்து சிங்களவர்கள் இங்கு வர வசதி செய்யப்பட்டது. இலங்கைப் பிரஜைகள் அல்லாதோர் - அதாவது மலையகத் தமிழர் வெளியேற்றப்பட்டனர்.

1977இல் பதவிக்கு வந்த ஜே. ஆர். அரசாங்கம் சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மூலம், பிறீமா ஆலை துறைமுகத்தின் ஓர் இறங்குதுறையையும், யப்பானிய மிற்சுபிசி நிறுவனம் மற்றோர் இறங்கு

வேலவன்

துறையையும்பிடித்துக் கொண்டன. தொழிலாளர்கள் என்ற போர்வையில் துறைமுகப் பகுதி முற்றாகச் சிங்கள மயமாக்கப்பட்டது.

1987 யூலை ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தின்பின், காங்கேசன் துறைமுகத்திற்கு நிவாரணம் எடுத்துவந்த இந்திய கப்பல்கள் கைவிலங்குகளை எடுத்துவரத் தொடங்கிய போது, திருமலைத் துறைமுகத்திற்கு பாரிய கவசவாகனங்களையும் எடுத்துவரத் தொடங்கின. பல ஆக்கிரமிப்புகளைக் கண்டதளம் மற்றொன்றைச் சந்தித்தது. கைவிலங்குகள் பயனற்றுப்போனாலும் கவசவாகனங்கள் பயன்படத் தொடங்கின. எனினும் அவையும் பழைய பாடமொன்றைப் புதியமுறையிற் கற்றுக்கொண்டன.

1990 மார்ச் 05இல் இத்தளத்திலிருந்து புறப்பட்ட இரு கப்பல்கள் மூலம் எடுபிடிகள் ஓடிமறைந்தனர் 1990 மார்ச் 23 காலை 9.55 மணியளவில் சீனன்குடா எண்ணெய்க்குத இறங்குதுறையில் இருந்து 'மார்க்' என்னும் கப்பல்மூலம் இந்திய 'அமைதிப் படை' தளபதி லெப். ஜெனரல் கல்கத் தனது கடைசி இந்திய ஜவானுடன் வெளியேறினார்.

1938 - 39 ஆண்டுகளில் ஹிந்துஸ்தான்நிறுவனம் பிரித்தானியருக்காக 101 பாரிய எண்ணெய்த் தொட்டிகளை நிர்மாணித்திருந்தது. இவை சீனன்குடா எண்ணெய்க்குத இறங்கு துறையில் இருந்து கப்பல்களில் வரும் எண்ணெய்களை நேரடியாக குதங்களுக்கு அனுப்பக்கூடிய பம்பிவசதிகளை கொண்டவையாகும். 1942 இல் ஜப்பானிய விமானக்குண்டு வீச்சினால் சேதம் அடைந்த ஒரு தாங்கி தவிர ஏனைய 100 உம் பாவிக்கப் படக்கூடியவை.

(6 ஆம் பக்கம் பார்க்க

# " இறந்துபோன எம்மவர்களின் ஆவியும் இந்த அழகான பூமியை மறப்பதில்லை "

வானத்தையும் பூமியின் கதகதப்பையும் எப்படி உங்களால் வாங்கவோ, விற்கவோ முடியும்? இந்த எண்ணமே எங்களுக்கு விநோதமாக இருக்கிறது.

காற்றின் புத்துணர்வும் நீரின் மினுமினுப்பும் நமக்குச் சொந்தமல்லாதபோது அவற்றை நீங்கள் எப்படி வாங்க முடியும்?

இந்தப் பூமியின் ஒவ்வொரு அம்சமும் என் மக்களுக்குப் புனிதமானது. ஒளிரும் ஒவ்வொரு ஊசியிலையும், மணல் பரந்த ஒவ்வொரு கரையும், இருண்ட காடுகளின் கனியும் பனிமூட்டமும், காட்டுக்குள் இருக்கும் ஒவ்வொரு வெட்டவெளியும், ரீங்காரமிடும் ஒவ்வொரு வண்டும் என்மக்களின் நினைவிலும் அனுபவத்திலும் புனிதமானவை. மரங்களுக்குள்ளே ஓடும் ஜீவரசம், செவ்விந்தியனின் நினைவுகளைச் சுமந்து செல்கிறது.

இறந்துபோன வெள்ளையர்களின் ஆவிகள் விண்மீன்களிடையே உலவும்போது தாம் பிறந்த மண்ணை மறந்து விடுகின்றன. இறந்துபோன எம்மவர்களின் ஆவிகளோ இந்த அழகான பூமியை ஒருபோதும் மறப்பதில்லை; ஏனென்றால் இந்தப் பூமி செவ்விந்தியனின் தாய். நாங்கள் இந்தப் பூமியின் ஓர் அங்கம்; அது எங்களில் ஓர் அங்கம். வாசமிக்க மலர்கள் எங்கள் சகோதரிகள். மானும் குதிரையும் பெருங் கழுகும் எங்கள் சகோதரர்கள். பாறை, மலை முகடுகள், புல்வெளிகள், படிந்திருக்கும் பனித்துளிகள், குதிரைக் குட்டியின் உடல் வெப்பம், மனிதன் - எல்லாமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை.

ஆகவே, எங்கள் நிலத்தை வாங்க விரும்புவதாக வாஷிங்டனில் இருக்கும் பெருந்தலைவர் சொல்லியனுப்பும்போது எங்களிடம் மிக அதிகம் எதிர்பார்க்கிறார். நாங்கள் சௌகரியமாக வாழ்வதற்கென்று எங்களுக்கு ஓர் இடத்தை ஒதுக்கித் தருவதாகப் பெருந்தலைவர் சொல்லியனுப்புகிறார். அவர் எங்கள் தந்தையாகவும், நாங்கள் அவருடைய குழந்தைகளாகவும் இருப்போமாம். ஆகையால் எங்கள் நிலத்தை வாங்குவதென்ற உங்கள் யோசனையை நாங்கள் பரிசீலிக்க வேண்டும். ஆனால் அது ஒன்றும் எளிதானதல்ல. ஏனென்றால் இந்த நிலம் எங்களுக்குப் புனிதமானது.

> 1854-இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பிராங்கலின்ஸ்பியேகஸ் அமெரிக்காவின் பழங்குடிகளான சிவப்பிந்தியரின் பெரியதொரு நிலப்பரப்பை விலைக்கு வாங்க விரும்பினார். சிவப்பிந்தியரின் தலைவராக இருந்த சீயகல்த் (அமெரிக்க ஆங்கில உச்சரிப்பில் சீயாட்டில்- Seattle) என்பவரிடம் இந்த ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. சீயகல்த் மனவேதனை தொனிக்கும் பதில் கடிதம் ஒன்றைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்.
>
> இக்கடிதம் பிறந்த மண்ணையும், இயற்கையையும் நேசிக்கும் எந்த ஒரு மனிதனதும் இதயத்துடிப்பையும் வெளிப்படுத்துவதாகும்.

ஓடைகளிலும் ஆறுகளிலும் பளபளத்து ஓடும் நீர் வெறும் நீரன்று. அது எங்கள் மூதாதையரின் ரத்தம். நாங்கள் உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்பதானால், அது புனிதமானது என்பதை நீங்கள் நினைவிலிருத்தவேண்டும். அது புனிதமானது என்பதையும், ஏரிகளின் தெளிந்த நீரில் விழும் ஒவ்வொரு நிழலும் எங்கள் மக்களின் வாழ்வின் நடந்த நிகழ்ச்சிகளையும் நினைவுகளையும் சொல்கிறது என்பதையும் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் சொல்லித்தர வேண்டும். நீரின் முணுமுணுப்பு என் தந்தையின் குரலாகும்.

ஆறுகள் எங்கள் சகோதரர்கள். அவை எங்கள் தாகத்தைத் தணிக்கின்றன. ஆறுகள் எங்கள் தோணிகளைச் சுமந்து செல்கின்றன, எங்கள் குழந்தைகளைப் போஷிக்கின்றன; நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதானால், ஆறுகள் எங்களுக்கும் - உங்களுக்கும் சகோதரர் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். ஒரு சகோதரனிடம் காட்டும் பாசத்தை இப்போதிருந்து நீங்கள் ஆறுகளிடமும் காட்ட வேண்டும்.

வெள்ளையனுக்கு எங்கள் வாழ்க்கை முறைகள் புரிவதில்லை என்பதை நாங்கள் அறிவோம். அவனுக்கு எல்லா நிலமும் ஒன்று. ஏனென்றால் இரவில் வந்து தனக்கு வேண்டியவற்றை நிலத்திலிருந்து சுருட்டி எடுத்துக்கொண்டு போகும் அந்நியன் அவன். இந்தப் பூமி அவனுக்குச் சகோதரன் அன்று, பகைவர் அவன் அதில் ஒரு பகுதியைக் கைப்பற்றிய பிறகு ஓய்வதில்லை. அடுத்த நிலம் தேடிச் செல்கிறான். அவன் தன்னுடைய தந்தையின் கல்லறையை விட்டுச் செல்கிறான்; அதைப் பற்றியும் அவனுக்கு அக்கறையில்லை. தந்தையின் கல்லறையும், குழந்தையின் பிறப்புரிமையும் மறக்கப்பட்டு விட்டன, தனது தாயான பூமியையும், சகோதரனான வானத்தையும், ஆடுகளைப் போலவோ, பிரகாசமான பாசிமணிகளைப் போலவோ விலைக்கு வாங்கப்படுவதற்கும், கொள்ளையடிக்கப்படுவதற்கும் விற்கப்படுவதற்குமான பொருள்களாகவே அவன் கருதுகிறான். அவனுடைய பசி இந்த நிலத்தின் வளத்தை விழுங்கிப் பாலைவனத்தையே விட்டுவைக்கும்.

> சீயகல்த் தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் எழுதிய இக்கடிதம், பின்னர் இலக்கண சுத்தமான மொழியில் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட வடிவம் The Illustrated Weekly of India (20 - 05 - 1984)இல வெளியிடப்பட்டது. அதனைத் தமிழில் வழங்குபவர் : புவியரசு

எனக்குத் தெரியவில்லை; எங்கள் வாழ்க்கை முறைகள் உங்களுடைய வாழ்க்கை முறையிலிருந்து வேறுபட்டவை. உங்கள் நகரங்கள் செவ்விந்தியனின் கண்களை உறுத்துகின்றன. ஒருவேளை செவ்விந்தியன் காட்டான், அவனுக்கு இதெல்லாம் புரிவதில்லை என்பதால் இப்படியிருக்கலாம்.

வெள்ளையனின் நகரங்களில் அமைதியான இடமேதுமில்லை. வசந்தகாலத்தில் இலைகள் துளிர்ப்பதையோ, ஒரு வண்டின் சிறகு சரசரப்பதையோ, கேட்கக்கூடிய இடமேதுமில்லை. ஒருவேளை இதுவும், நான் ஒருகாட்டான், எனக்கு இதெல்லாம் புரிவதில்லை என்பதாலோ? நகரங்களின் இரைச்சல் செவிகளையே அவமானப் படுத்துவதாக இருக்கிறது. இராப்பாடிப் பறவையின் ஏகாந்தக்குரலையோ இரவில் குளத்தைச் சுற்றித் தவளைகள் நடத்தும் வாக்குவாதங்களையோ கேட்கமுடியாத மனிதனின் வாழ்வென்ன வாழ்வு? நான் ஒரு செவ்விந்தியன். இதெல்லாம் எனக்கும் புரிவதில்லை. குளத்து நீரைத் தொட்டபடி விரையும் காற்றில் மென்மையான ஒலியும், நண்பகல் மழையினால் கழுவப்பட்ட அல்லது பைன் மரத்தினால் மணமூட்டப்பட்ட காற்றின் சுகந்தமும் செவ்விந்தியனுக்குவிருப்பமானவை.

(7ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

1981 இன் ஆரம்பத்தில் சிறிலங்காவிற்கு விஜயம் செய்த ஓர் அமெரிக்க போர்க்கப்பலின் தளபதி ஜெனரல் டேவிட் ஜோன்ஸ் என் வரின் இரகசியக் குறிப்பொன்றின், இவைபற்றி இருந்த விடயங்கள் சிறிலங்கா எதிர்க்கட்சிகளினால் 1982 இல் அம்பலப் படுத்தப் பட்டன.

அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலத்திலுள்ள 'ஹஸ்ரன்' எனும் நிறுவனத்தில் சிங்கப்பூர் கிளை நிறுவனத்திடம் இப் பாரிய குதங்களை ஒப்படைக்க சிறிலங்கா அரசு தயார் என்பதே அதுவாகும் இதன்மூலம் அமெரிக்க கடற்படை இவற்றைப் பயன்படுத்தக்கூடிய சாத்தியங்கள் பற்றி ஊகம் தெரிவிக்கப் பட்டது. ஆனால் அச் செய்தியில் பிழை உண்டு என சிறிலங்காவெளிவிவகாரஅமைச்சர் ஏ. சி எஸ் ஹமீட் தெரிவித்தார். எனினும்குறிப்பிட்ட சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள ஜே.ஆர் தயாராகவே இருந்தார். இது இந்தியாவிற்கு ஆத்திரமூட்டியது திருமலைத்துறைமுகத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் நாட்டம் ஒரு புறமிருக்க பிராந்திய வல்லரசாகிய இந்தியாவின் நாட்டம் வெளிப்படையானது இலங்கைப்பிரச்சினை தொடர்பாக இந்தியா முன்வைக்கும் சகல யோசனைகளும் இதனை வெளிக்காட்டுகின்றன.

1984 இல் அப்போதைய வெளியுறவுச் செயலர்பார்த்தசாரதியின் வட்டமேசை மாநாட்டிற்கான அடிப் படை ஆகிய இணைப்பு 'சி' திருமலைத்துறைமுகம்" பிரதேசம் என்பவற்றை நிர்வகிக்க ஒரு அதிகாரசபை என்கிறது.

1987 இல்ஜே ஆர்–ராஜீவால் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்கள் திருமலைத்துறைமுகம்,எண்ணெய்க்குதங்களை இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகின்றது அதிலும் மற்றெல்லா துறைமுகங்களிலிருந்து குறிப்பிட்டு இத் துறைமுகம் சொல்லப் படுகிறது.

1989 இல் பிரேமதாசா அரசால் வி.பி.சிங் அரசுக்கு அனுப்பப்பட்ட ஒப்பந்தநகல் இதுவிடயத்தில்இந்தியாவைத் திருப்திப் படுத்த முயல்கின்றது, சிறிலங்கா அரசால் முன் வைக்கப்படும் எந்த ஒரு சமாதானதிட்டமும் மற்றைய எல்லாத் துறைமுகங்களைவிட திருமலை துறைமுகமும் அதன் சூழலும் வேறுபடுத்தி குறிப்பிடப்படுகின்றன.

சுருக்கமாக மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு அம்சமாக திருமலைத்துறைமுகம் விளங்குகிறது என்பதாகும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த எமது பிரதேசமே இன்றும் அன்னியரின் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டே இருக்கிறது. 3010 சதுர கி.மீ பரப்புள்ள திருமலைப்பிரதேசம் 140 க்குமேற்பட்ட இராணுவ முகாம்களால் சூழப்பட்ட நிலையே இன்று உள்ளது.

எனினும் துறைமுகத்தில் அன்னியர்கொடி அகன்று தமிழர் கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை யாழ். கோட்டையில் பறக்கும் புலிக்கொடி கட்டியம் கூறுகிறது.

## புரிதல்..

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் உங்களுக்குத் தெரியாது. அக்கா வீட்டில இருக்கிறது தான் பெரிய விசயமாய் போச்சு"

அவனுக்கு சட்டென்று சிரிப்பு வந்தது. "உன்ரை அக்கா நல்ல ஆள் தான். அது பிரச்சினை இல்லை. ஆனால் இஞ்சை குடியிருக்க வந்து இப்ப என்ன கொஞ்ச நாள் தானே ஆகுது. இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் எல்லாம் உனக்கு விளங்கும். உன்ரை சொந்தக் காணியின்ரை பக்கத்துக் காணிக்காரன் கதியால் வெட்டையுக்க இலை குழை விழுந்ததுக்கே சண்டைக்குப்போனனியப்பா நீ- அதெல்லாம் மறந்து போனியே? இன்னும் கொஞ்சக் காலம் பொறு. இரண்டு மாதமோ, மூன்று மாதமே போகட்டும். நீயாய் நாங்கள் வேறை வீட்டை போவம் எண்டு சொல்ல வருவாய், அப்ப தான் உனக்கு எல்லாமே விளங்கும். அப்ப தான் அவன்களை இவங்கள் சொறியிற விசயமேவிளங்கும்" என்றான் அவன்.

NEWMASTER Institute
B. M. C. LANE, JAFFNA.

92 A/L
புதிய கணிதப் பிரிவு II ஆரம்பமாகியுள்ளது

* திரிகோணகணிதம்
* இயக்கவியல்

ஆசிரியர்: திரு. கிருஷ்ணா
நேரம்: ஞாயிறு 10.00முதல் 12.00 வரை
செவ்வாய் 04.00முதல் 06.00 வரை

(B/2777)

புதிய முகவரியில்
DHL
WORLDWIDE EXPRESS
உலகம் முழுவதுக்குமான துரித
தபால் சேவையை
நாம் நடாத்தி வருகின்றோம்.
எமது புதிய முகவரியில்
உங்கள் கடிதங்களை ஒப்படையுங்கள்.
DHL INTERNATIONAL
C/o. COSMOS MARKETING SERVICES,
120, K. K. S Road, JAFFNA.
(B2770)

# குரோரியா, ஸ்லவேனியா சுதந்திரப் பிரகடனம்

# ஐரோப்பிய தேசிய எல்லைகளை மாற்றுமா?

யூக்கோசெலவோக்கியாவிலிருகுடியரசுகள்கடந்த வாரத் தொடக்கத்தில் சுதந்திரப்பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் மூளும் அபாயம் உருவாகியுள்ளது. அங்கிருந்து வரும்செய்தியின்படி யூக்கோசெலவோக்கிய இராணுவம் போருக்கான தயாரிப்பில் தீவிரமாக ஈடுபடுவதாகவும் சுதந்திரப் பிரகடனம் செய்த குடியரசுகள் நோக்கி இராணுவ கவச வாகனங்கள் டாங்கிகள் சகிதம் நகர்ந்துகொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்ற அதேவேளை சுதந்திரப் பிரகடனம் செய்த குடியரசுகளின் தேசிய காவற்படையினரும் போருக்கு ஆயத்தமாகி வருவதாயும் தெரிவிக்கப்படுகின்றது.

யூக்கோசெலவோக்கியா ஆறு குடியரசுகளையும் இரண்டு சுயாட்சி மாகாணங்களையும் கொண்ட ஒரு சமஷ்டி அமைப்பாகும். இதில் சேர்பிய குடியரசு பெரியதாகும் அக்குடியரசினுள்ளேயே இரண்டு சுயாட்சி மாகாணங்களும் உண்டு.

யூக்கோசெலவோக்கியாவில் 1946 ஆம் ஆண்டுஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஆறு குடியரசுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1963ஏப்ரல் 7 ஆம் திகதி இரண்டு சுயாட்சி மாகாணங்கள் பிரகடனப் படுத்தப்பட்டன. இச்சுயாட்சி மாகாணங்கள் அதன் குடியரசின் பொதுவேலைத்திட்டத்தின் கீழ் இயங்கிவந்தன.

யூக்கோசெலவோக்கிய ஒரு கம்யூனிச நாடாக இருப்பினும் ஏனைய கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்து சற்று வேறுபாடான போக்கைக்கொண்டிருந்தது. இந்தியா எகிப்து என்பவற்றுடன் இணைந்து அணிசேரா இயக்கத்தை தோற்றுவித்த ஆரம்ப நாடுகளில் யூக்கோசெலவோக்கியாவும் ஒன்றாகும் என்பதோடு சுதந்திர வர்த்தகவலய உருவாக்கத்திற்கு வழி ஏற்படுத்திக்கொடுத்த முதலாவது கம்யூனிச நாடாகும்.

கம்யூனிச கட்சித் தலைவர் ஜோசிப புரொஸ் டிட்டோ நீண்டகாலமாக யூக்கோசெலவோக்கியாவை தன் ஆட்சியின்கீழ் வைத்திருந்தார். 1980 இல் டிட்டோ இறந்ததைத் தொடர்ந்து யூக்கோசெலவோக்கியாவில் நெருக்கடிகள் தீவிரமடைந்தன.

எண்பதுகளின் பிற்பகுதியில் கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியாளருக்கு எதிரான மக்கள் போராட்டம் இடம்பெற்றது. அத்தோடு சோவியத் யூனியனிலும் கிழக்கைரோப்பாவிலும் தோன்றிய ஜனநாயகச் சீர்திருத்தங்கள் மேலும் அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்தன.

கடந்த வருடத்தில் நிகழ்ந்த ஜனநாயகக் கிளர்ச்சியின் காரணமாக ஜனாதிபதி கொல்லப்பட்டார் ஜனநாயகம்கோரிப் போராடியவர்களினால் ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டது. 1990 இன் இறுதியில் இடம்பெற்ற தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி படுதோல்வியடைந்தது.

## ஆட்சி மாற்றம் பிரச்சினையைத் தீர்க்கவில்லை

ஆனால், யூக்கோசெலவோக்கியாவில், ஆட்சிமாற்றம் இந்நெருக்கடிகளைத் தீர்க்கத் தவறிவிட்டன. 'கடும் இனப் பிளவுகள் ஏற்பட்டுள்ளதுடன் புதிய பிளவுகளும் தோன்றியுள்ளன' என தற்போதைய யூக்கோசெலவோக்கிய நிலை பற்றிக் குறிப்பிடுகையில் ஒரு இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

தற்போதையநெருக்கடி யூக்கோசெலவோக்கியாவிற்குப் புதிய ஆட்சித் தலைவரைத் தெரிவுசெய்வது தொடர்பாக ஆரம்பமாகியது. புதிய ஆட்சித் தலைவராக பெரிய குடியரசான சேர்பியாவைச் சேராத தற்பொழுது சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள குரோரியா குடியரசைச் சேர்ந்த மெஸிக் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலை உருவாகியதே இந்நெருக்கடிக்கு காரணமாகும்.

யூக்கோசெலவோக்கியாவில் சேர்பியா குடியரசே பெரிதாகும். மொத்த சனத்தொகையில் 41.5 வீதத்திற்கு மேல் அது கொண்டுள்ளது. ஆனால் குரோரியா குடியரசு சேர்பியா மாநிலத்தைவிட சற்று அதிகமான நிலப்பரப்பை கொண்டிருப்பதும் மொத்த சனத்தொகையில் சுமார் 20 வீதம் அளவிலேயே கொண்டுள்ளது.

இந்நிலையில் புதிய தலைவராக குரோரியா குடியரசைச் சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப்படும் நிலை உருவாகியதும் சமஷ்டி ஜனாதிபதி தெரிவிற்கான கூட்டத்தைக் கூட்டுவதை சேர்பியா குடியரசு தடுத்துவிட்டது. இந் நிலையிலேயே குரோரியா குடியரசு சுதந்திரப் பிரகடனம் செய்தது. குரோரியா குடியரசைத் தொடர்ந்துபரப்பளவில் மிகச் சிறியதும் குடித்தொகையில் சுமார் 8வீதம் அளவினதுமான ஸ்லவேனியக் குடியரசும் சுதந்திரப் பிரகடனம் செய்தன இவ் இரு குடியரசுகளும் யூக்கோசெலவோக்கியாவில் வளம்பொருந்திய குடியரசுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமது சுதந்திரப் பிரகடனம் பற்றிக் கருத்து வெளியிட்ட குரோரிய பிரதிநிதி ஒருவர் 72 இடைஞ்சல் நிரம்பிய வருடங்களின் பின்னர் சுதந்திரமாகப் பிரிந்து செல்கின்றோம் என்றார்.

அதேவேளை சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள இரு குடியரசுகளும் யூக்கோசெலவோக்கிய சமஷ்டி இராணுவத்திற்கு தமது பிரதேசங்களில் ஆட்சேர்ப்பதைத் தடுத்துள்ளதோடு இராணுவத்தினரில் உள்ளோரையும் விலகுமாறும் கோரிக்கை விடுத்தன. மேலும் சமஷ்டி அரசிற்குரிய கொடுப்பனவுகளையும் நிறுத்தியுள்ளன.

> யூக்கோசெலவோக்கியப் பிரிவினைக்கு அமெரிக்கா வழங்கும் அங்கீகாரம் சோவியத்யூனியனின் பிரிவினைக்கும் அமெரிக்கா வழங்கும் அங்கீகாரமா? அவ்வாறாயின் உலகை அது மீண்டும் ஒரு கெடுபிடிப் போருக்கு இட்டுச் செல்லுமா?

## ஐ. பொ. சமூகத்தின் சமரசம்

யூக்கோசெலவோக்கியாவில் ஏற்பட்டுள்ள இந் நெருக்கடியைத் தீர்த்துவைப்பதில் ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகநாடுகள் தீவிர கவனம் செலுத்தியுள்ளன. லக்சம்போர்க் தலைமையில் ஐரோப்பிய பொருளாதாரச் சமூக நாடுகளின் மூவர் அடங்கிய தூதுக்குழு ஒன்று பெல்கிரேட் சென்று யுத்தத்தைத் தடுக்குமாறும், சுதந்திரப் பிரகடனத்தை இடைநிறுத்தி வைக்குமாறும் கோரிக்கை விடுத்தது. குடியரசுகளுடனும், யூக்கோசெலவோக்கியாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்தின் ஆலோசனையை ஏற்று யூக்கோசெலவோக்கியாவும் சுதந்திரப் பிரகடனம் செய்த குரோரியா ஸ்லவோக்கியஆகியனவும் சமரசத் திட்டமொன்றுக்கு இணங்கின இச் சமரசத் திட்டத்தில் மூன்று அம்சங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சுதந்திர பிரகடனத்தைமூன்று மாதங்களுக்குப் பிற்போடுதல், யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்தல், யூக்கோசெலவோக்கியத் தலைவரைத் தெரிவதற்கான தேர்தலை நடத்துதல் ஆகியவையே ஐ பொ சமூகத்தின் அமைதித் திட்டமாகும். ஆனால், இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டதாகக் கூறிய யூகோசெலவாக்கிய சுதந்திரப் பிரகடனம் செய்த குடியரசுகள் அவற்றைநடைமுறை படுத்தவில்லை போருக்கான முஸ்தீப்பில் ஈடுபட்டுள்ளன.

ஆனால் ஐ பொ சமூகமும் முயற்சிகளைக் கைவிடவில்லை பிராக் நகர ஐ. பொ சமூக நாடுகளின் மாநாட்டில் இவ் விவகாரம் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஐ பொ சமூகம் தமது இம் முயற்சி தோல்வியுறுமானால் பிரச்சினையை ஐ நா. சபைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அமெரிக்க நிலைப்பாடு

ஐரோப்பாவில் தோன்றியுள்ள இத்தேசிய இன நெருக்கடியானது இன்றைய சர்வதேச அரசியலில் மிகவும் முக்கியமானதாகும். ஐ பொ.சமூகம் இப்பிரச்சினைகளையூக்கோசெலவோக்கியா பிரிவினைக்கு உட்படாமல் தீர்வு காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் அதேவேளை, அமெரிக்கா, பிரிட்டன் பிரிவினையை எதிர்க்கவில்லை ஆனால் சற்றுக் காலம் தாழ்த்தி சமாதான ரீதியில் சுதந்திர அரசுகள் தோற்றுவிக்கப் படலாம் எனக் கருதுகின்றன.

குடியரசுகள் இரண்டும் சுதந்திரப் பிரகடனம் செய்த வேளை அமெரிக்கா அதனை ஆதரிக்கவில்லை யூகோசெலவோக்கியா பிரிவினையை தான் விரும்பவில்லை என வாஷிங்டன் அறிவித்தது. ஆனால், ஒரு வாரத்தின் பின் அமெரிக்கா தன்நிலையை சற்று மாற்றி சமஷ்டி இராணுவத்தின் செயற்பாடுகளை கண்டித்துள்ளதோடு புதிய அரசுகளுக்கு ஓரளவு ஆதரவும் தெரிவித்துள்ளது இதனைப் பிரிட்டனும் ஆதரித்துள்ளது.

அதேவேளை ஐ.பொ. சமூக நாடுகள் பலவும் அயல் நாடுகளும் யூக்கோசெலவோக்கியாபிரிவினையை எதிர்த்துள்ளன ஜேர்மனி, ஆஸ்திரியா ஆகியன போன்றவை இதனை எதிர்த்துள்ள முக்கிய நாடுகளாகும். ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்த யூக்கோசெலவோக்கியாவின் பிரிவினை ஐரோப்பாவின் ஸ்திரத்தன்மையைக் குறைக்கும் எனக் கருதுகின்றன.

அமெரிக்காவைப் பொறுத்து யூக்கோசெலவோக்கியப் பிரச்சினை மிகவும் அவதானமாகக் கையாள வேண்டிய விடயம் ஒன்றாகவுள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

யூக்கோசெலவோக்கிய குடியரசுகளின் பிரிவினையை அமெரிக்க நட்பு நாடுகளான ஐ. பொ, சமூக நாடுகள் பெரும்பாலானவர்கள் ஆதரிக்கவில்லை ஆனால் பிரிட்டன் ஆதரிக்கிறது.

அதேவேளை கிழக்குஐரோப்பாவில் ஜனநாயக மீட்பிற்குப் போராடியவர்களை அமெரிக்கா கைவிட முடியாத நிலையில் உள்ளது. இந்த ஜனநாயக மீட்பிற்குப் போராடியவர்களே இன்று தேசிய இனப் போராட்டங்களிலும் முன்னணியில் உள்ளனர். இவர்களின் நட்பு மூலமே கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ ஆட்சியாளர்கள் கவிழ்க்கப்பட்டனர்.

அத்தோடு சோவியத் யூனியனில் இன்று உருவாகியிருக்கும் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்த வேண்டுமாயின் அவர்களுக்கு அமெரிக்கா உதவும் என்ற நம்பிக்கையை வளர்க்க வேண்டியும் உள்ளது.

அதேவேளை யூக்கோசெலவோக்கிய பிரச்சினையை மௌனமாக இருந்து அவதானித்துவரும் சோவியத் யூனியன் அமெரிக்காவின் நேரடியான இராணுவத்தலையீட்டையோ அன்றி யூக்கோசெலவாக்கியாவின் பிரிவினைக்கு அமெரிக்கா வேறு விதத்தால் ஆதரிப்பதையோ விரும்பப் போவதில்லை அமெரிக்கா யூக்கோசெலவோக்கியப் பிரிவினைக்கு வழங்கும் அங்கீகாரம் என்பது சோவியத்தின் பிரிவினைக்கு வழங்கும் அங்கீகாரமாகவே கருதப்படும் ஆகையினால் அமெரிக்கா பிரிவினைக்கு வழங்கும் ஆதரவு மீண்டும் உலகை ஒரு கெடுபிடி யுத்தத்திற்கு இட்டுச் செல்லலாம்.

இந்நிலைமைகளை கருத்திற் கொண்டே பிரிவினையை ஆதரிப்பதாகவும் அதனைச் சமாதானமாக சற்றுக் காலந் தாழ்த்திப் பெறலாம் எனவும் அறிவித்துள்ள அமெரிக்காவின் இவ் அறிவிப்பு ஐரோப்பாவின் தேசிய எல்லைகளில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துமா? [illegible] என்பதை இனி நடக்கவுள்ள நிகழ்வுகளைக் கொண்டே தீர்மானிக்கலாம்

- ஜெயா -

---

## இறந்துபோன

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காற்று, செவ்விந்தியனுக்கு அருமையானது. ஏனெனில் விலங்கு, மரம், மனிதன்-எல்லாமே உயிர்த்து கொள்வது ஒரே காற்றைத்தான். வெள்ளையனோ தான் சுவாசிக்கும் காற்றைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. சிறிது சிறிதாகச் செத்துக்கொண்டிருக்கும் மனிதனைப் போல, நாற்றத்தை உணரும் சக்தியற்றவனாக அவன் இருக்கிறான். ஆனால் நாங்கள் எங்கள் நிலத்தை உங்களுக்கு விற்பதானால், இந்தக் காற்று எங்களுக்கு அருமையானது என்பதையும், அது தான் வாழ வைக்கும் எல்லா ஜீவராசிகளுடனும் தன் ஆன்மாவைப் பகிர்ந்து கொள்கிறது என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். எங்கள் பாட்டனாருக்கு அவருடைய முதல் மூச்சைத் தந்த காற்று, அவருடைய இறுதி மூச்சையும் வாங்கிக் கொள்ளவும் செய்கிறது. உங்களுக்கு நிலத்தை விற்பதானால், புல்வெளியின் மலர்களால் இனிமையாக்கப்பட்ட காற்றை அனுபவிப்பதற்கு வெள்ளைக்காரனும் போகக்கூடிய ஒரு புனிதமான இடமாக நீங்கள் அதனை வைத்துக்கொள்ள வேண்டும்.

எங்கள் நிலத்தை வாங்கும் உங்கள் யோசனையை நாங்கள் பரிசீலிப்போம். அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடிவு செய்தால், நான் ஒரு நிபந்தனை விதிப்பேன்: வெள்ளையன் இந்த மண்ணிலுள்ள விலங்குகளைத் தனது சகோதரனாக நடத்த வேண்டும்.

நான் ஒரு காட்டான் வேறு எந்த வழியும் எனக்குப் புரியவில்லை ஓடும் ரயிலில் இருந்து வெள்ளைக்காரன் சுட்டுக் கொன்ற ஓராயிரம் எருமைகள் புல்வெளியில் கிடந்து அழுகுவதை நான் பார்த்திருக்கிறேன். நான் ஒரு காட்டான். உயிர் வாழ்வதற்காக மட்டுமே நாங்கள் கொல்லும் எருமைகளைவிடப் 'புகை கக்கும் இரும்புக்குதிரை' எப்படி அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கும் என்பது எனக்குப் புரியவில்லை.

விலங்குகள் இல்லையேல் மனிதன் எங்கே? விலங்குகள் எல்லாமே மறைந்துவிட்டால் மனிதன் மிகுந்த தனிமைக்குள்ளாகி மடிந்து விடுவான். ஏனென்றால் விலங்குகளுக்கு என்ன நேர்கிறதோ அது விரைவில் மனிதனுக்கும் நேரும். எல்லாமே ஒன்றோடொன்று இணைந்தவை.

உங்கள் குழந்தைகளின் பாதங்களின் கீழ் உள்ள நிலம் எங்கள் பாட்டனாரின் சாம்பல் என்பதை நீங்கள் அவர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். எங்கள் இனத்தவரின் இரத்தத்தாலும், சதையாலும் செழுமை பெற்றது இம்மண் என்பதை உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். அப்போது அவர்கள் இம்மண்ணை மதித்து நடப்பார்கள் இப் பூமியே நம் தாய் என்பதை நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லித் தருகிறோம்.

அதுபோல நீங்களும் உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லித் தாருங்கள். பூமிக்கு என்ன நேர்கிறதோ அது பூமியின் மைந்தர்களுக்கும் நேரும். பூமியின் மீது மனிதன் காறி உமிழ்வது, தங்கள் மீதே காறி உமிழ்ந்து கொள்வதாகும்.

நாங்கள் இதனை அறிவோம் பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல மனிதன் தான் பூமிக்குச் சொந்தம். நாங்கள் இதனை அறிவோம். ஒரு குடும்பத்தை ஒன்றிணைக்கும் இரத்தத்தைப் போல் எல்லாப் பொருட்களும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. பூமிக்கு நேர்வதெல்லாம் பூமியின் மைந்தர்களுக்கும் நேரும். உயிர்களாகிய வலையை மனிதன் பின்னவில்லை. அவன் அதில் ஓர் இழையே. வலைக்கு என்ன செய்கிறானோ, அதைத் தனக்கும் செய்து கொள்கிறான்.

வெள்ளையனுடன் கடவுள் கூடவே நடந்து வந்து ஒரு நண்பனோடு நண்பன் பேசுவது போலப் பேசவும் செய்கிறாரோ, அந்த வெள்ளையனும் கூட பொதுவான ஊழினின்று தப்ப முடியாது...எப்படியிருந்தாலும் நாம் சகோதரராக இருக்கலாம்; பார்ப்போம். ஒன்று மட்டும் நாங்கள் அறிவோம். இருவர் கடவுளும் ஒன்றே இதை வெள்ளையன் ஒரு நாள் தெரிந்து

(2 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக சட்டசபையில் பண்ருட்டி மீது தாக்குதல்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் பாட்டாளி மக்கள்கட்சி உறுப்பினரும், முன்னாள் மாநில அமைச்சருமான பண்ருட்டி ராமச்சந்திரன், சுயேட்சை உறுப்பினர் தாமரைக்கனியினால் தாக்கப்பட்டார்.

இந்திரா காங்கிரஸ் கட்சி இந்தத் தாக்குதலைக் கண்டித்தது

ஆளுநர் பீஷ்மநாராயணசிங் பேரவையில் உரை நிகழ்த்திய பிறகு பண்ருட்டி ராமச்சந்திரன் ஒரு அறிக்கையை ஆங்கிலத்தில் படித்தார்.

அப்போது சுயேட்சை உறுப்பினரான தாமரைக்கனி ஆங்கிலத்தில் படித்த அறிக்கை விளங்கவில்லையென்றும், ஆளுநர் உரை நடைபெறும்போது அறிக்கை படிக்கக்கூடாது என்றும் இருக்கையிலிருந்து எழுந்தபடியே சத்தம்போட்டார் பின்னர் ஆளும் கட்சியான அ.இ.அ. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த அறிக்கை வாசிப்பை ஆட்சேபித்துக் குரலெழுப்பினர். இந்தச் சந்தர்ப்பத்தில் தாமரைக்கனி பண்ருட்டி ராமச்சந்திரன் அருகில் சென்று அவரது முதுகில் ஒரு அடி கொடுத்துவிட்டுத் தமது இருக்கைக்குத் திரும்பினார். பேரவை உறுப்பினர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

பண்ருட்டி ராமச்சந்திரன் எதையும் பொருட்படுத்தாதவர் போல் கையிலிருந்த அறிக்கையைப் படித்துமுடித்துவிட்டு வெளிநடப்புச் செய்தார். இதனையடுத்து திருநாவுக்கரசு அணி, கம்யூனிஸ்ட்கட்சி, மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

## ஆளுநர் பதவி தேவையில்லாத ஒன்று

\- பண்ருட்டி

(சென்னை)

தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினர் பண்ருட்டிராமச்சந்திரன், தான் தாக்கப்பட்டது தொடர்பாகச் செய்தியாளரிடம் பேசியபோது, ஆளுநர் பதவி தேவையில்லை என்பதைவலியுறுத்திஅறிக்கை வாசித்ததாகவும் ஆளுநர், முதல்வர் செல்வி ஜெயலலிதா முன்னிலையிலேயே தான் தாக்கப்பட்டதைக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார். இந்தச் சம்பவத்துக்கு முதலமைச்சரே பொறுப்பேற்ற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா செய்தியாளரிடம் பேசும்போது இச்சம்பவத்தைக் கண்டித்தார். ஆளுநர் பேசும் முன்பும், பின்பும் இடைமறிக்கும் வகையில் எந்த ஒரு உறுப்பினரும் எதையும் செய்யக் கூடாது என்ற பேரவை விதியை பண்ருட்டி மீறிவிட்டதாகக் கூறினார்.

சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவருமான எஸ்.ஆர், பாலசுப்பிரமணியம் இச்சம்பவம் கண்டிக்கப்படத்தக்கது என்றார்.

இதற்கிடையே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டப் பேரவையில் பண்ருட்டி ராமச் சந்திரன் தாக்கப்பட்டது ஜனநாயக விரோதச் செயல் என்று கூறி. இந்தச் சம்பவத்தைக் கண்டித்திருக்கிறார்.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தைச் சந்திக்கும் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திற்கும் இடையில் நவாலி வீதியில் ஓர் குறிப்பிட்ட தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி எம்மிடம் பெற்றுக்கொள்ளவும்.

பரீட்சை செய்முறைகள் படவுள்ளன.

இதுவரை காலமும் மேற்படி செய்முறைப் பரீட்சை கொழும்பிலேயே நடைபெற்று வந்தது தெரிந்ததே. ஆனால் இம்முறை மேற்படி பரீட்சைக்குத் தோற்ற மாணவர்கள் கொழும்பு வரமுடியாதிருப்பது சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே பரீட்சைத் திணைக்களம் இம் முடிவை எடுத்துள்ளது.

இதே வேளை கிழக்கு மாகாண மாணவர்களுக்கான மேற்படிசெய்முறைப் பரீட்சை கொழும்பிலேயே நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு

உள்ள பொலிஸ்நிலையங்களில் பதிவதற்கான காலக்கெடு வரும் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது தமிழ் நாடு அரசின் பணிப்புரையின் பேரில் வழங்கப்பட்டிருந்த முன்னைய காலக்கெடு நாளையுடன் முடிவடைகிறது.

பழகாமத்தில்

பட்டவர்களில்உயர்தர வகுப்பு மாணவர்களான முருகேசப்பிள்ளை நவநீதன் (வயது 19) வல்லிபுரம் யோகேஸ்வரன் (வயது 19) சினித்தம்பி வெள்ளைத்துரை (வயது 18) ஆகியோர் முகாமில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர், இளையதம்பி துரையப்பா என்பவரும் மற்றொருவரும் சித்திரவதைகளின் பின்னர் தொடர்ந்தும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வலி. வடக்கிலிருந்து

திரன் (வயது 2 1/2), கா.வள்ளியம்மை (வயது 68), கே. காசிப்பிள்ளை (வயது 95), வேலாயுதம்சரநேசன் (வயது 6) காசிப்பிள்ளை பாக்கியம் (வயது 70), ஆசைப்பிள்ளை சிதம்பரம் (வயது 80), சி.அன்னமுத்து (வயது 54), க. தம்பிப்பிள்ளை வயது 54), செ.தம்பிராசா (வயது 58), தி.ரத்தினம் (வயது 75), அருளம்பலம் நாகம்மா (வயது 56), சின்னையா சாந்தலக்சுமி (வயது 35), முருகுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை (வயது 60), எஸ். லோகேஸ்வரன் (வயது 21), கந்தையா நடராசா (வயது 70), க. பரமேஸ்வரி (வயது 55), இ ராசலிங்கம் (வயது 50), சி சுந்தரி (வயது 40), க. பாக்கியம் (வயது 53), சே அருளம்பலம் (வயது 74) ஆகியோரே அந்த இருபத்திரண்டு பேருமாவர். (ஸோ)

## இன்று கலை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவ மன்றத்தினரின் கலை விழா ஒன்று இன்று காலை 9 00 மணிமுதல் நிறுவன ஏபெல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் வலிகாமப் பிரிவுத் தொடர்பாளர்கள், கிராமியத் தொடர்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4 30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் கேட்டுள்ளது.

* *

தமிழீழவிடுதலைப்புலிகளிடம் துணைப்பயிற்சி பெற்ற அனைவருக்குமானகலந்துரையாடல் ஒன்று இன்று (05.07.91 வெள்ளிக்கிழமை) பிற்பகல் நான்கு மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. துணைப் படைப் பயிற்சி பெற்ற அனைவரையும் இந் நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்

★ ★

தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் கூடி சில முக்கிய விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்காக நாளை (6-7-91) காலை 9 00 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் தொண்டர் ஆசிரியர் சங்கக் கூட்டம் நடைபெறவுள்ளது. தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் தவறாது சமூகம் தருவதோடு நேர்முகப் பரீட்சைக்கு அனுமதி கிடைத்தவர்கள் அனுமதிக்கடிதத்துடன் வருகை தருமாறு தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

★ ★

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்தவர்களின் குறைபாடுகளை ஆராய்வதற்காக இடம்பெயர்ந்தவர்களுக்கான கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை (7-7-91) மாலை 4 00 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் தின மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது இடம்பெயர்ந்த காரைநகர் வாசிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அகதிகள் வரவைக் கட்டுப்படுத்த

## பிரித்தானியாவிலும் கடும் நடவடிக்கை

(லண்டன்)

பிரித்தானியாவில் அகதிகள் வருவதைக் கட்டுப்படுத்த விமான நிலையங்களிலும் துறைமுகங்களிலும் கடும் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

பிரித்தானியாவிற்கு அதிகளவு தொகையான அகதிகள் வருவதைத் தடுக்க பிரித்தானிய அரசாங்கம் புதிய நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள தீர்மானம் கொண்டுவந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் தீர்மானம் பிரித்தானிய குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

வாரம் ஒன்றுக்கு ஆயிரம் அகதிகள் அரசியல் தஞ்சம் கோருகின்றனர் என்றும் 1990 ஆம் ஆண்டில் புகலிடம் கோரிய 30,000 பேரில் ஒரு சிறிய தொகையினரே அவர்களின் தாய்நாட்டில் இம்சைப்படுத்தப்பட்டனர் என்றும் பிரித்தானியஉள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

புதிய நடவடிக்கைகளின் பிரகாரம் துறைமுகங்கள் விமான நிலையங்களில் ஆவணங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படும். விண்ணப்பங்களை பரிசோதனை செய்வதற்கு அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். புகலிடம் கோரியுள்ள 50.000 பேர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமல் இருக்கின்றன என்றும் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது விசா இன்றி ஆட்களை ஏற்றிவரும் விமானக்கம்பனிகளுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை இருமடங்காக (2000 ஸ்ரேலிங் பவுண்களாக) அதிகரிக்கப்பட்டுள்ளது.

வரதன்

இரத்மலானையிலுள்ள வரதனின் பெண் சிநேகிதர் ஒருவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து நகர விசேட புலனாய்வுக்குழுவினர் தலைமைக்காவலையை தோட்டமொன்றிற்குச் சென்றசமயம், கைது செய்யப்பட்டுவிடும் நிலையில் இருந்த வரதன் சயனைட் வில்லையை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சிலரே நடராசா வரதன் என்பவருக்கு அடைக்கலம் கொடுத்திருந்ததாகச் சந்தேகம் தெரிவித்துள்ள பொலிஸார் அக்கட்சியின் தலைவர் பெ.சந்திரசேகரனையும் கைது செய்துள்ளனர்.

சயனைட் உட்கொள்வதைத் தடுக்கமுயன்ற பொலிஸாரை எட்டி உதைத்துவிட்டு வரதன் சயனைட் உட்கொண்டார் என்றும், அவரது சடலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

கொழும்பில்

தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

பயங்கரவாத அபாயத்தை எதிர்த்துப், போரிட ஒன்றிணைந்த நடவடிக்கை ஒன்றுக்கு அமைச்சர்கள் ஒப்புதல் தெரிவித்தார்கள்.

பொருளாதார முறையில் கற்றுள்ள வர்த்தகம் மற்றும் சேவைகளில் தாபன ரீதியான ஒத்துழைப்பிற்கும் அமைச்சர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

அழுகிய

வரே சடலங்களாகக் காணப்படுகின்றனர் என்றும் இராணுவத்தினர் இவர்களைச் சுட்டு வீதியோரத்தில் போட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களின் விபரங்கள் அறியப்படவில்லை. (தி)

கரையோர

போராளிகளின் ஊடுருவலைத் தடுப்பது தொடர்பான நடவடிக்கைகள்குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் 32 எயிட்ஸ்

பாதிக்கப்பட்ட 32 பேர்களில் 23 பேர் இலங்கையர் என்றும் மீதிப்பேரோர் வெளிநாட்டவர்கள் என்றும் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா அம்பலவாணர்

(இளைப்பாறிய ஆசிரியை)

ஏழாலை தெற்கைச் சேர்ந்த திருமதி சின்னம்மா அம்பலவாணர் 04 - 07 - 91 அன்று சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திரு. கதிர்ப்பிள்ளை அம்பலவாணர் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், திருமதி வி சோமவல்லி, திரு. பரமநாதன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை யாழ்ப்பாணம்), திரு. சத்தியநாதன் (U. K ), திரு. நேமிநாதன், சுதர்சனா (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் மூன்றாம் வருடம்) உமாயாணி ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. தி. விநாயகமூர்த்தி (யாழ். மாநகரசபை), திருமதி வச்சலா, திருமதி சரஞ்சினி (U. K ) ஆகியோரின் அன்பு மாமியாரும், சயந்தா, சஜேந்திரன், சஜீவன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 05 - 07 - 91 (இன்று) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

சாடி வீதி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
க. அம்பலவாணர்
(R/1511)

## ஆண் தாதிகள் தேவை

தனியார் வைத்திய நிறுவனமொன்றில் கடமை புரிவதற்கு ஆண் தாதிகள் தேவைப்படுகின்றார்கள். தகுதியானவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். தகுந்த ஊதியம் வழங்கப்படும். பயிற்சிபெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்களை ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.